# திராவிடநாடு

23–11–58 | வார வெளியீடு | விலை 16 காசு


# கேள்!

**கா. வேழவேந்தன்**

நீதானே தமிழன்? உன்றன்
நிலந்தானே மறவர் பூமி?
நீதானே ஈழம் வென்றோன்?
நெடுங்கடல் கடந்தோன்? அன்று
நீதானே 'புற'த்தைக் கண்டோன்?
'நெடுந்தொகை' கண்டோன்? இங்கே
நீதானே அறத்தைப் பண்பை
நிலைபெறச் செய்தோன் மண்ணில்?

எங்கேஉன் வீரம்? தில்லி
எடுஎன்றால் எடுக்கின் றாயே!
எங்கேஉன் ஆண்மை? இந்தி
ஏல்என்றால் ஏற்கின் றாயே!
எங்கேஉன் பெருமை? சும்மா
இருஎன்றால் இருக்கின் றாயே!
எங்கேஉன் வண்மை? சோறு
இலைஎன்று அலைகின் றாயே!

குற்றாலம் இருந்து என்ன?
கொடைக்கானல் இருந்து என்ன?
வற்றாத நதிகள் நூறு
வளமுடன் பாய்ந்து என்ன?
சற்றேனும் தரத்தில் தாழாச்
சரித்திரம் பெற்று என்ன?
புற்றாகி, அடிமைப் பட்டுப்
புல்லாகி வதைகின் றாயே!

இன்னுமா சுரண்டல் ஆட்சி
இந்நாட்டில் நிலைத்தல் வேண்டும்?
இன்னுமா மொழியும் வாழ்வும்
இழிநிலை அடைய வேண்டும்?
இன்னுமா புரிய வில்லை?
இனியுமா வெட்கம் இல்லை?
இன்னுமா உணர்ச்சி இல்லை?
இரத்தத்தில் சூடு இல்லை?

★

டாக்டர் சிவாகோ எனும் நூலை எழுதியமைக்காக பாஸ்டர் நாக் எனும் கவிஞரைக் கண்டித்தது அல்லவா, ரஷ்யா? இதைப் பற்றி, உலகமே கண்டனமும் கேலியும் கிளப்பியிருக்கிறது! அது மறைவதற்குள்ளாகவே, திடுக்கிடும் செய்தி இன்னொன்றும் வந்துள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்பு, மிகவும் சிறப்போடு இங்கு 'விஜயம்' செய்து போனாரே புல்கானின் அவரை மூலைக்கு அனுப்பிவிட்டார்களாம் இப்போது! ரஷ்யாவின் பிரதமராகயிருந்த அவரைக் குற்றவாளியாக்கியிருக்கிறார். குருஷேவ். நாட்டின் நலம் விரும்பாதவர், என்று கட்சி முன், குற்றம்சாட்டியிருக்கிறார் இந்தக் கிழமை.

*

ஸ்டாலினுக்குப் பிறகு ரஷிய நட்சத்திரமானார் மாலங்கோவ்! ஸ்டாலின் காலத்திலேயே உலகப் புகழ்பெற்ற அரசியல்மேதையாக விளங்கினார் மொலடாவ்! ரஷியாவின் பெரிய தலைவராக விளங்கினார் காகனோவிச்! மிகப் பெரிய தளபதி எனப் புகழ்பெற்றவர் ஜுகாவ்!—இவர்கள் எல்லோரையுமே, ஒருவாருக, அரசியல் மேடையிலிருந்து 'சீட்டு'க் கிழித்துவிட்டார் குருஷேவ். இப்போது, அவர்களோடு, புல்கானினும் சேர்க்கப்பட்டு விட்டார்

*

கோவார்டுவாஸ்டு என்பவர் பிரபல அமெரிக்க நாவலாசிரியர்! உரிமை இழந்த மக்களைப்பற்றி அவர் எழுதிய நூல்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தீப்பொறி எனலாம். இப்படி இவர் எழுதுவதைக் கண்ட, அமெரிக்க சர்க்கார், அவரை ஒரு கம்யூனிஸ்டு என்று குற்றம் சாட்டியது. அவர் அஞ்சவில்லை. அந்த கோவார்டுவாஸ்டுக்கு, ஸ்டாலின் பதக்கம் அளித்து, 1953-ல் கவுரவித்தது ரஷ்யா. அவர் ஒரு பெரிய ஆசிரியர்! முற்போக்குவாதி! உலக சமாதானம் விரும்பி! என்றெல்லாம், வாழ்த்துப் பாடியது ரஷ்யா. ஆனால், இப்போது, அவரைப் பற்றி அதே ரஷ்யா என்ன

## கேள்வி! சேதி!

சொல்கிறது தெரியுமா? பூர்ஷ்வா என்கிறது! அங்கேரிக்குள் ரஷ்யா தலையிட்டதை, அவர் கண்டித்தாராம். உடனே, அவருடைய எழுத்துத் திறமை போயிற்று — முற்போக்குவாதி எனும் பட்டம் பறந்தது — பூர்ஷ்வா ஆகிவிட்டார்!!

*

தமக்கு பிடிக்காதவரை பழி வாங்குவது ரஷியாவில் மட்டும் தானா நடக்கிறது? மிகப்பெரிய பாடகர் பால்ராப்சனை என்ன செய்தது அமெரிக்க சர்க்கார்? ஆர்தர்மில்லர் எனும் நாவலாசிரியரைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தவில்லையா? — என்று, கேட்கத் தோன்றும் நமக்கு. பால்ராப்சனை, ஒரு கம்யூனிஸ்டு என்று படாத பாடுபடுத்தினார்கள், அமெரிக்கர்கள். அவருக்கு ஸ்டாலின் பதக்கம் வழங்கப்பட்டதும் அமெரிக்க சர்க்காரே ஆத்திரப்பட்டது உண்மை. அவரை, வெளிநாடு போக அனுமதி மறுத்ததும் உண்மை. ஆனால் பரிசைத் திருப்பி அனுப்புமாறு யாரும் செய்யவில்லை! அதோடு அவர் சர்க்காரின் தீர்ப்பை எதிர்த்து உயர் நீதி மன்றத்தில் வழக்காடும் உரிமை இருந்தது. வழக்காடினார். வெளிநாடு போக அனுமதியும் பெற்றார். ரஷ்யாவிலுள்ள, 'பாஸ்டர்நாக்'குக்கு இந்த உரிமைகளிருக்கிறதா, என்று யாராவது அமெரிக்கர் கேட்டால், நாம் விழிக்கவேண்டியதுதான்!

*

சைப்ரஸ் தீவுக்குச் சுதந்திரம் வாங்கித்தரப் பாடுபடும் மகாரியாஸ் பாதிரியார் இந்தக்கிழமை அமெரிக்காவுக்குப் போயிருக்கிறார்! நியுயார்க்போய், ஐக்கிய நாடுகள் சபையில், சைப்ரஸ் பிரச்னையை எழுப்பப்போகிறார். அவருக்குக் கிரீஸ், பக்கத்துணை இருக்கிறது. உலக நாடுகள் சபைமுன் தன்னாட்டு விடுதலைக் கோரிக்கையை வைத்து, நியாயம்பெறப் போயிருக்கிறார் அவர்! "இப்படி ஏன் ஒரு நாளைக்கு நாமும் செய்யக் கூடாது" என்று இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தி. மு. க. சொன்னபோது, "ஐ. நா.வுக்குப் போகப்போகிறார்களாமே! இவர்களுக்கு ஐ. நா. சபையைப்பற்றி ஏதாவது புரிகிறதா?" என்று குத்தி விடும் குணாளர் கொக்கரித்தது, கவனத்துக்கு வரக்கூடும், நமது தோழர்களுக்கு. சைப்ரஸ் போகிறது! பலம் பெற்றால் நாமும் ஏன் போகமுடியாது!!

☆

தங்களுடைய முயற்சியினால் முன்னுக்கு வந்தவர்களை, அவர்கள் எப்படி முன்னுக்கு வந்தார்கள் என்று மக்கள் கவனிப்பதில்லை. "அவனுக்கு அதிர்ஷ்டம் அடிக்கிறது" என்று சுலபமாய்ச் சொல்லிவிடுகிறார்கள். இதனால் முன்னுக்கு வந்தவர்களின் சாமர்த்தியங்கள் மக்களுக்குத் தெரியாமல் போகிறது. அதே மாதிரி தாங்களும் ஏன் முயற்சி செய்யக் கூடாது என்ற தூண்டுதல் ஏற்பட வழியில்லாமல் போகிறது. முன்னுக்கு வந்தவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்களைக் கற்றுக்கொள்ளாமல், அதிர்ஷ்டம் என்ற வார்த்தையை உபயோகித்து அந்த அரிய பாடத்தை இழந்துவிடுகிறார்கள்.

# வியர்வையும் இரத்தமும்!

17] ஆண்டு சந்தா ரூ. 8 [23-11-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 19

கோடி கோடியாகக் கொட்டிக்கொடுக்கலாம் நீர்-கோபுரத்தின்மீது ஏற்றி உட்காரவைக்கலாம் — ஆனால், அதற்குப் பரிசாக எனது கற்பையன்றோ கேட்கிறீர்? உமது காசு எனது கால் தூசுக்குச் சமானம்! கல்லுடைப்பேன்—மரம் பிளப்பேன்—கால் படி அரிசி கிடைத்தாலும் அதைக்கொண்டு என் குடும்பத்தைக் காப்பாற்றுவேன். பணத்துக்காக உமது பல்லிளிப்புக்கு ஒருநாளும் பலியாகிவிடமாட்டேன். இரத்தம் சொட்ட உழைத்து, வியர்வை ஓடப் பாடுபட்டாலும், தன்மானத்தோடு நான் வாழ்வதையே விரும்புகிறேன்!! — என்றுதான், எந்தப் பெண்ணும் கூறுவாளே யொழிய, கணவன் ஏன், இக்கனவான் தேவலாமே என்று எண்ணமாட்டாள். அப்படி நினைப்பது கேவலம்! மானம்போயினும், மவுசுதான் முக்கியம் என்றுநல்ல பெண்மணி ஒருநாளும் எண்ணமாட்டாள்!!

அரசியல் உலகில், இரத்தமும் வியர்வையும் சிந்தி, நல்வாழ்வில் ஈடுபடும்போது பிறக்கும் தன் மதிப்பின் சிறப்பே சிறப்புத்தான். கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்குதல்போல, நாட்டின் வாழ்வை அடகுவைத்து, நலம்பெற எந்த நல்லவனும் முயலமாட்டான். அமெரிக்கா கொட்டிக் கொடுக்கிறது—பிரிட்டன் பிரியமொழிகளைக் கொட்டுகிறது—அதன் வசமே நம் நாட்டை ஒப்படைத்து விடுவோம் என்று யாரும் சொல்லார்.

கூழானாலும் கூடிக் குடிப்போம்! கஞ்சியானாலும் நம் கலயத்தில் குடித்து மகிழ்வோம்! பீதாம்பரமும், வெண்பட்டும், எவ்வளவு அழகாயிருந்தாலும் இரவல் சரக்காயிருந்து, என்ன பெருமை? கந்தையாயினும் 'எனது' என்றிருப்பதிலிருக்கும் களிப்புக் களிப்புத் தானே!!—என்றே, எந்த விடுதலை வீரனும், எண்ணுவான்.

"ஐயோ! நம்முடைய நாட்டில், இரயிலை ஓட்டவிட்டவர்களாச்சே. தபாலைக் கண்டுபிடித்தவர்களாச்சே. தந்திக் கம்பிகளை வைத்தவர்களாச்சே. 'இவர்களை விரட்டலாமா?'', என்று எந்தக் காங்கிரஸ்காரரும் கேட்கவில்லை. அதற்குப் பதில், "சரிய்யா! இதெல்லாம், எமது வரிப்பணத்தைச் சுரண்டித் தானே செய்தாய்? போ! போ!!'', என்றே முழக்கமிட்டனர்.

"எப்படி உங்களால்வாழமுடியும்? கொஞ்சங்கூட அரசுப் பழக்கம் கிடையாதே! திடீரென உங்கள் கையில் ஒப்படைத்தால், தேசம் திக்குமுக்காடிப் போய்விடுமே. அதனால்தான் பார்க்கிறோம். இப்போது, உங்களிடம் இந்தியாவைத் தர விரும்பவில்லை'', என்று வெள்ளையன் பதிலளித்தபோது, "நாங்கள் வாழ்கிறோமோ, சாகிறோமோ எங்கள் நாட்டை எங்கள் வசம் கொடு! எல்லோரும் எதுவும் மற்றுச் சாகும்படி நேர்ந்தாலும் எங்கள் மண்ணில் சுதந்திர புருடர்களாகவாவது சாகிறோம்,'' என்றே சங்கநாதம் செய்தார்கள் சுதந்திர வீரர்கள்.

இந்தச் சுதந்திர உணர்ச்சியின் முன்னால், இந்நாள்வரை, எந்தப் பீரங்கியும் நின்றதில்லை! பெரிய பெரிய வல்லரசுகளும், எதிர்த்து வெற்றிகண்டதில்லை!! மூர்க்கன்—முரடன்—ஒரு பிடி பிடித்தால் செத்தோம்—சரி, அவன் விருப்பப்படி இருந்துவிடுவோம் என்று கையாலாகாத பெண்ணும் எண்ணமாட்டாள். கத்தி கிடைக்காவிடில் நகம், அதுவும் பயன்படவில்லையெனில் பல், இப்படி எது கிடைத்தாலும் அதைக்கொண்டு மூர்க்கனை எதிர்ப்பாள்; மூச்சுப்போகும் நேரம்வரை, மானங்காக்கப்போராடத் தயங்காள். அதே மனோநிலைதான், ஒருநாட்டு விடுதலை வீரர்களுக்கும் ஏற்படுவதாகும். எதிரியின் பலம் படாது கண்ணில்! தான் அடிமையாக வாழ்வதா எனும் ஆத்திரமே பிறக்கும்! எதிரி இவ்வளவு பெரியவனாயிற்றே, அவனை எப்படி எதிர்ப்பது என்கிற சந்தேகம் தோன்றாது மனதில்; எப்படியோ எதிர்த்தே தீருவேன் எனும் வெஞ்சினம்தான் பிறக்கும் உள்ளத்தில்!!

**இப்படி வீரமும் வேகமும் கொண்டவர்களை, நீண்ட நாட்கள், அடிமைகளாக வைத்திருக்கமுடியாது என்பதுதான் உலக சரித்திரமாகும்.**

இத்தகைய உள்ள உரங்கொண்ட வீரர்கள் எண்ணற்றோர் உண்டு திராவிடத்தில்! பழைய நாள் புகழையும், இற்றை நாள் அழிவையும் எண்ணி எண்ணிக் கொதித்துக்கிடக்கும் கொள்கை வீரர்கள், ஏராளம் இருக்கிறார்கள் திராவிடத்தில்!! சாவாயினும் சரி, எமது தன்மானம் தழைக்க, எமது மொழி பிழைக்க, எமது மக்கள் வாழ எதையும் செய்யச் சித்தமாயிருக்கிறோம் என்று சூளுரைக்கும் தொண்டர்கள், பெருகி வருகிறார்கள், ஒவ்வொரு நாளும்.

கேட்கிறார்களாம், அமைச்சர்கள், **"எப்படிய்யா வாழ முடியும்? திராவிடநாடு தனித்து வாழ்ந்தால், என்ன இருக்கிறது வாழ? அணை கட்ட வேண்டுமென்றால் பணம் வேண்டாமா? ஆலை கட்ட வேண்டுமென்றால் யார் உதவ முன்வருவார்கள்?**

சிறு நாட்டை யாராவது மதிப்பார்களா?'' என்று.

*இதே கேள்வியைத்தான் கேட்டார்கள், அவரைப் பார்த்து!*

*கேட்டது மட்டுமல்ல, மிரட்டக்கூடச் செய்தார்கள்.*

*''முடியுமோ உன்னால்! உன் நாட்டில் எவ்வளவு இடத்துக்கு நீர்ப்பாசன வசதி இடையாது என்பது எங்களுக்குத் தெரியும். பாசன வசதி இல்லையெனில் கழனிகள் எப்படி விளையும். உனக்கு வேண்டிய உணவுப் பொருள்களுக்கு எங்கே போவாய்?''*

*ஆதாரங்களை அள்ளிமெறிந்து சொன்னார்கள்—ஆகவே எமது தயவைப்பெறு, எங்களுக்கு 'குலாமாக' இரு, சூயஸ் கால்வாயை எமக்குச் சொந்தமாக்கு என்றெல்லாம் சொன்னார்கள்.*

*நாசர், நகைத்தார்! கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கும் கபோதி நானல்ல என்று உரைத்தார்!*

*எகிப்து, இங்கிலாந்தின் பிடியைவிட்டு விலகத் துடித்தபோது, பயமுறுத்தினர் முதலில். நாசரின் சங்கநாதம் கிளம்பியதும், சூயஸ் கால்வாய் எமக்குச் சொந்தம் என்று மிரட்டிப் பார்த்தனர், துப்பாக்கிகள் துளைத்தாலும் சரி, போர்க்கப்பல்கள் ஆயிரம் வந்து இறங்கினாலும்சரி, எமது மண்ணில் இனியும் அந்நியர் ஆதிக்கம் நீடிக்கவிடமாட்டேன் என்றார் நாசர். பிணங்கள் விழுந்தன! பயப்படவில்லை எகிப்து மக்கள்! பேச்சும் மூச்சும், மானம் — மானம் — தன்மானம் என்றே முழக்கமிட்டனர்.*

*''திமிர் கொண்டவனே! உன்னைத் திக்குமுக்காட வைக்கிறோம். உன் நாட்டுக்குக் கட்டித்தருவதாக இருந்தோமே, மிகப்பெரிய அணைக்கட்டு, அதைக் கட்ட உதவமாட்டோம். எங்கள் உதவியில்லாமல் நீ என்ன செய்யமுடியும்? இருபது இலட்சம் ஏக்கர்களுக்கு அந்த அணையால் பாசன வசதி கிடைக்கும். அதை இழக்கப்போகிறாய்! உன் நாடு, திண்டாடப் போகிறது!'' என்று எச்சரிக்கை விடுத்தது பிரிட்டன். உதவி தருவதாக வாக்களித்திருந்த அமெரிக்கா, தம்பி 'பிரிட்டன்' சொல்கிறானென்றதும் 'ஆமாம்' என்று தலையாட்டிற்று.*

என்ன செய்வது?

அசுவான் அணைகட்ட பலநூறு கோடிகள் வேண்டும்!

இயந்திரங்கள் வேண்டும். என்ன செய்வது!

அமெரிக்கா கைவிட்டுவிடுகிறதே! இருபது இலட்சம் ஏகர் உற்பத்தியில்லாமற் போனால், என்ன செய்வார்கள் மக்கள்?

வேலையிலாத விவசாயிகள் பெருகுவரே!

அவர்தம் விழிகளில் பசிக்கனல் தெரிய ஆரம்பித்தால், பாடுபட்டுப்பெற்ற சுதந்திரம் நிலைக்காதே!

*அச்சமும், குழப்பமும் நாசரையும் அவர்தம் தோழர்களையும் பிடித்தாட்டிற்று. அதற்காக, கற்பை இழந்துவிடமுடியுமா? உரிமையை விற்றுவிடவா இயலும்?*

*முழக்கமிட்டார் நாசர் — உங்கள் உதவியில்லாமலே கட்டுகிறோம், என்று!*

*எப்படி? பார்க்கிறோம்!—என்றது அமெரிக்கா.*

*தன் பிடியிலிருந்து சுதந்திரம் பெற்ற எகிப்து, திண்டாடப்போவதைக் கண்டுரசிக்கத் தயாராகயிருந்தது, இங்கிலாந்து!!*

*ஆனால், நடப்பது என்ன தெரியுமா? அசுவான் அணை கட்டப்பட்டுக்கொண்டிருக்கிறது! எந்த இடம் அதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டதோ அந்த இடத்தில் வேலை ஆரம்பமாகிவிட்டது!!*

*இந்தக் கிழமை 14-ந்தேதி, நாசர், மிக மகிழ்ச்சியுடன் அறிவித்துள்ளார்—''பணம் ஏது என்றார்கள்! இதோ பணம்—இதுதான் எமது பணம்!!'' என்று தன்னாட்டு மக்களைக் காட்டி, பூரிப்புடன் வெளியிட்டுள்ளார்.*

**எங்கள் பணம்—எங்கள் சொத்து—எது தெரியுமா? எங்களுடைய இரத்தமும் வியர்வையும்தான்!!**

**இரத்தத்தையும் வியர்வையையும் கொண்டே அசுவான் அணையைக் கட்டிக் காட்டுகிறோம்.**

*என்று முழக்கமிட்டுள்ளார். வேண்டிய இயந்திரக் கருவிகளை வழங்குகிறது ரஷ்யா. தேவையான பணத்தையும் உழைப்பையும், பங்குபோட்டுக் கொண்டு தருகிறார்கள் எகிப்து மக்கள்.*

*வெளிநாட்டினரின் சூது புரிந்துவிட்டது அவர்களுக்கு—அசுவான் அணை கட்டப்பட்டால், வீணே சிதறும் நீர், கழனிகளுக்குக் கிடைக்கும் — சலசலவென்று ஓடிவரும் தண்ணீர் தரும் மின்சார சக்தியால் பல ஆலைகள் இயங்கும்; தொழில் வளம் பெருகும்—பிறகு, பெற்ற சுதந்திரத்தை, யார் தயவுமின்றி நாம் காப்பாற்றிக்கொண்டு தன்மானத்தோடு வாழ முடியும்—அப்படி வாழவொட்டாது தடுக்கவே வல்லரசுகள் சதிசெய்கின்றன என்பது புரிந்துவிட்டது எகிப்து மக்களுக்கு.*

மேற்படி அணை கட்ட நாள் ஒன்றுக்கு முப்பதினாயிரம்பேர் உழைக்கிறார்களாம்!!

அவர்கள் சிந்தும் ஒவ்வொரு துளி வியர்வையும் இரத்தமும், கூலிக்கு மாரடிப்பதல்லவே? மானம், மானம் என்று தானே மார்தட்டும்!

*அதனால்தான் நாசர் பெருமிதத்துடன் வெளியிடுகிறார், இரத்தத்தையும் வியர்வையையும் கொண்டே இந்த அணையைக் கட்டி முடிக்க முடியும் எம்மால் என்று.*

*அசுவான் அணை மட்டுமல்ல, ஒரு நாட்டு மக்களின் உள்ளத்தில், வீரமும் வேகமும்மட்டும் இருந்துவிட்டால், எத்தனை அணை வேண்டுமானாலும் கட்ட முடியும்! முடியுமா--என்று நினைத்திருந்தால் இன்று அந்நியர் தம் பிடியிலிருந்து பல நாடுகள் விடுபட்டு, சுயராஜ்ய முழக்கம் செய்திருக்கவே முடியாது!!*

*ஒரு நாட்டின் வாழ்வுக்கு, முக்கியம், எதிரியின் தயவல்ல. தன்மானமும், தன்னாடு எனும், வேகமும் தான். இதையிரண்டும் இழந்தால் பிறகு அந்நாடு கால்தூசுக்குச் சமானம்!!*

# கைப்புண்ணுக்குக் கண்ணாடியா?

"நெய்வேலித் திட்டமா — நெடு நாட்கள் ஆகாது."

"அலுமினிய ஆலையா—அடுத்த திட்டத்தில் பார்த்துக்கொள்ளலாம்!"

"காகித ஆலையா — கொஞ்சம் பொறுத்திருங்கள்!"

"கோதாவரித் திட்டமா — கொள்ளை கொள்ளையாகப் பணம் தேவைப்படுமே!"

"அணுசக்தி ஆலை வேண்டுமா —அதற்கென்ன அவசரம்?"

"சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டமா—செலாவணித் தொல்லை குறையட்டும்!"

"துறைமுக அபிவிருத்தியா— துரிதமாகச் செய்யக்கூடிய காரியமல்லவே!"

"மால்நாடு (மைசூர்) பகுதி வளர்ச்சிக்கு வழிசெய்ய வேண்டுமா—மெள்ள மெள்ளத்தானே முடியும்!"

— இப்படி, தென்னகத்தின் திட்டங்களுக்கு, பதில்கள் வந்த வண்ணம் இருக்கின்றன—பணம் தான் வரவில்லை!

* * *

"வடக்காவது, தெற்காவது, எல்லாம் பைத்தியக்காரத்தனம்! மகாஜனங்களே, இதை நம்பாதீர்கள்! மோசம் போகாதீர்கள்!"— என்று அபாயச் சங்கு ஊதுகிறார் ஒரு அமைச்சர்!

"எப்பொழுது பார்த்தாலும் வடக்கு தெற்குத்தானா? இவர்களுக்கு இதைத் தவிர வேறென்ன தெரியும்?"—என்று காரசாரமாக முழங்குகிறார் 'எல்லாம் தெரிந்த' காமராசர்!

"இதோ சவால் விடுகிறேன்! வடக்கும் வளரவில்லை—தெற்கும் தேயவில்லை! அண்ணாதுரையின் அரசியல் வாழ்வையும், என் அமைச்சர் பதவியையும் பந்தயமாக வைப்போம்! என் வாதத்தை எவரேனும் தவறென்று நிரூபிக்கட்டும், பார்க்கலாம்!" — இது 'சவால் வீரர்' சுப்ரமணியத்தின் சண்டமாருதப் பிரசாரம்!

"வடக்கு வளருகிறது என்கிறார்கள்! ஏன் அங்கே ஏழைகள் இல்லையா? அல்லது இவர்கள், சொல்லும் 'திராவிட நாட்டில்' பணக்காரர்கள் இல்லையா? இதெல்லாம் எதார்த்த வாதத்திற்குப் பொருந்தாது! கார்ல்மார்க்ஸ் என்ன சொன்னானென்றால்......!" இது, கார்ல்மார்க்ஸின் 'தத்துப் பிள்ளைகள்' என்று கூறிக்கொள்ளும், கம்யூனிஸ்டுகளின் கண்டனக் கணை!

M. S. வெங்கடாசலம், M.A.

அப்பப்பா! இத்தனையும் பார்க்கிறோம்! எள்ளி நகையாடத் தோன்றுகிறது! ஆனால் உள்ளத்துக்குள்ளே சிரித்துக் கொள்ளுகிறோம்; பாவம், உண்மையை மறைப்பதற்கு இவர்களெல்லாம் படுகிற பாடென்ன, எடுத்துக் கொள்ளுகிற முயற்சிகள் எவ்வளவு? ஆனாலும், இவர்கள் அடைகின்ற ஏமாற்றத்தின் அளவென்ன? இவர்களுக்குக் கிடைக்கின்ற தோல்வி எத்தகையது, என்று எண்ணிடும்போது!

"காரிருளால் சூரியன் தான் மறைவதுண்டோ, கரை சேற்றால் தாமரையின் வாசம் போமோ?" என்று மெள்ள, மகிழ்ச்சியால் பாடிக்கொள்ளுகிறோம்.

* * *

"பஞ்சபாண்டவர்கள் எத்தனை பேர்?" என்று ஒருவன் கேட்க, "இது தெரியாதா, கட்டில் காலைப் போல் மூன்று" என்று சொல்லி, இரண்டு விரலைக்காட்டி, ஒன்று என்று எழுதி, கடைசியில் அதையும் அழித்துவிட்டானாம் மற்றொருவன்!

அதைப்போல், டில்லி ஆட்சிப் பீடம் 'திராவிடத்திற்கென்று 'பெரிய மனம்' வைத்துப் போட்டிருக்கின்ற திட்டங்களே மிகச் சில! அவற்றிலும் பெரும்பகுதி கைகழுவி விடப்படுகின்றன பற்பல காரணங்களைக் கூறி!

"பாரதம் படும் துயரம் பாரீர்! கடைக் கண்ணால் எங்கள் கஷ்டங்களைக் காணீர்! நிதிமிகுந்தவர் பொற்குவை தாரீர், நிதி குறைந்தவர் காசுகள் தாரீர், அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளீர்" என்று முன்னாள் நிதியமைச்சர் கிருஷ்ணமாச்சாரியும், இந்நாள் நிதியமைச்சர் மொரார்ஜி தேசாயும், 'பசை' மிகுந்த நாடுகளுக்கெல்லாம் சென்று, பக்குவமாகப் பேசி, பெற்றுவந்த தொகைகளையெல்லாம் சேர்த்து. மொத்தமாக, இந்தத் திட்டத்தில் செலவிடப்பட இருப்பது ரூ. 4500 கோடி!

ஆனால் தென்னகத்துக்கென்று இதில் ஒதுக்கப்பட்டிருப்பதோ ரூ. 560 கோடிதான் — மொத்தத்தில் ஏறக்குறைய 12%!

இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலும் வாழுகின்ற மக்கள் தொகையில் நான்கில் ஒரு பகுதிக்கு மேல் திராவிடத்தில் இருக்கிறார்கள்! ஆனால் அதற்கென்று இரண்டாவது திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கின்றதொகை எட்டில் ஒரு பங்கிலும் குறைவு!

அதுமட்டுமல்ல! தென்னகத்தில் திட்டங்கள் நிறைவேற்றப் படுகின்ற அளவையும் வேகத்தையும் பார்த்திடும்போது, எட்டில்

ஒரு பங்காக இருக்கின்ற அந்தத் தொகையாவது செலவிடப்படுமா என்று ஐயப்படவேண்டிய நிலை ஏற்படுகிறது!

நெய்வேலித் திட்டத்திற்கென்று ஒதுக்கப்பட்டிருந்த ரூ. 70 கோடியில் பெரும்பகுதி அடுத்த திட்டத்திற்கென்று ஒத்திவைக்கப்பட்டுவிட்டது!

அகில இந்தியாவிலும் ஏறக்குறைய 600 மைல் நீளத்திற்கு இரயில் பாதை போடத் திட்டம் வைத்துக்கொண்டு, தென்பகுதி இரயில்வேக்கு 31 மைல் நீளம் தான் போடமுடியும் என்று, தமிழகத்திலிருந்து சென்று டில்லி ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருக்கின்ற அமைச்சரே கூறிவிட்டார்!

இப்படியெல்லாம் திட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டும், கைகழுவி விடப்பட்டும் வருவதன் பலனாக, மொத்தமாகத் தென்னகத்திற்கென்று போடப்பட்டிருக்கும் திட்டத்தில் 48% தான் நிறைவேற்றப்பட்டிருக்கிறது—கடந்த 3 ஆண்டுகளில்!

**3 ஆண்டுகள்!**
**48 சதவீதம்!**

இதே வேகத்தில் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், தென்னகத்திற்குச் செலவிடப்படக்கூடிய தொகை, ரூ. 448-கோடிதான்!

ஆனாலும் மொத்தத் திட்டம் என்னவோ ரூ. 4500 கோடிக்குத்தான்!

அப்படியானால் தென்னகத்தின் பங்கு, 12-சதவீதத்திலிருந்து, 10-சதவீதத்திற்குக் குறைகிறது!

பஞ்சபாண்டவரின் தொகையைச் சொன்னவனுக்கும், தென்னகத்திற்குத் திட்டம் தரும் டில்லிக்கும் என்ன வேறுபாடு?

தென்னாட்டிற்கென்று போடப்பட்ட திட்டங்கள், இவ்வளவு தாமதமாக நிறைவேற்றப்படக் காரணம் என்ன என்று யாராவது கேட்டால், டில்லியிலே உள்ள மூலவர்கள்கூடப் பதில் சொல்ல வேண்டியதில்லை. நம்மவர்களே முந்திக்கொள்ளுகிறார்கள்—என்னென்னவோ விளக்கங்களைத் தருகின்றார்கள்!

"அந்நியச் செலவாணியிலே உள்ள சிக்கலை அறிவீர்களா நீங்கள்! அதனால்தான் திட்டங்களை நிறைவேற்றுவதில் காலதாமதம்." என்று விபரீதமான ஒரு விளக்கம், அடிக்கடி நமது காதில் வந்து நுழைகிறது!

அந்நியச் செலாவணியிலே சிக்கல்கள் அநேகம், உண்மைதான்! ஆனாலும் அந்தச் சிக்கல்கள் வடநாட்டிலே போடப்பட்டிருக்கின்ற எண்ணிறந்த திட்டங்களுக்கு இடையூறாக இருக்கவில்லையே, ஏன்?

இந்தக் கேள்வியைக் கேட்டால் நிச்சயமாக ஆத்திரம் வரும் நமது அமைச்சர்களுக்கு! ஆனால் நாம் தென்னகத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் நம்மை அர்ப்பணித்துவிட்டிருப்பதால், இயற்கையாகவே இந்தக் கேள்வி நம் உள்ளத்திலே எழுகிறது — இதே கேள்வியைத் தென்னகத்து மக்கள் அனைவரது உள்ளத்திலும் எழுப்புகிறோம், அச்சம், தயை, தாட்சண்யத்திற்குக் கட்டுப்படாமல்!

தென்னகத்தில் செலவிடப்பட்டிருக்கிற தொகை, செலவிடுவதென்று மதிப்பிடப்பட்ட தொகையில் 48% — ஆனால் வடநாட்டில் இந்தத்தொகை 50-சதவீதத்துக்கும் அதிகம்!

"48-சதவீதத்துக்கும் 50-சதவீதத்திற்குமிடையே இருக்கின்ற வித்தியாசம் சதவீதம்தானே! இதை வைத்துக்கொண்டு வடநாட்டின் திட்டங்கள் வேகமாக நிறைவேற்றப்படுகின்றன என்று வாய்வலிக்கக் கத்துவதிலே என்ன பொருள்?" என்று அமைச்சர்களும், அவர்தம் பரிவாரங்களும், மிகவும் சாமர்த்தியமாக வாதிடுவதாக எண்ணிக்கொண்டு நமது வாதத்திற்கு மறுப்புரைக்க முயலக்கூடும்!

"புள்ளி விவரம் சில சமயங்களில் கண்களை மறைக்கக்கூடும்" என்று கூறுவதுண்டு! அந்தக் கூற்றுக்கு நல்லதோர் உதாரணம் இது, இவ்வளவுதான்!

தென்னகத் திட்டத்தின் 48-சதவீதம் ரூ. 266-கோடி! வடநாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கிற திட்டத்தின் சதவீதம் 50-ஆனாலும், அதன் தொகை ஏறக்குறைய ரூ. 2000-கோடி.

2000-கோடி எங்கே!--266-கோடி எங்கே!

"வடக்கு வளருகிறது, தெற்குத் தேய்கிறது" என்று நாம் கூறுவதற்கு இதைவிட வேறென்ன ஆதாரம் தேவை!

ஐந்து ஆண்டுகளில் தென்ன கத்தில் நிறைவேற்றப்படவேண் டிய திட்ட அளவு, திட்டக் குழு வின் மதிப்பீட்டின்படி ரூ. 560 கோடி.

அப்படியானால் 3-ஆண்டுகளில் ரூ. 336-கோடி செலவிடப்பட் டிருக்க வேண்டும்!

ஆனால் செலவிடப்பட்டிருப் பதோ ரூ. 266-கோடி!

அப்படியானால் இன்னும் ரூ. 70 கோடி செலவிடப்படாமல் இருக் கக் காரணம் என்ன? இதற்கு யார் பொறுப்பாளி—மாநிலங் களா? மத்திய அரசாங்கமா?

மாநில அரசாங்கங்கள் மத்திய அரசாங்கத்தைக் குறைகூறு கிறது — மத்திய அரசு மாநில அரசுகளைக் குற்றம் சாட்டுகிறது — இன்னும் சிலர் மக்களைக் குற் றம் சாட்டுகிறார்கள்!

ஆனால் குற்றம் உண்மையிலே எவருடையது, என்ன காரணத் தாலே அத்தகைய குற்றம் நேரு கிறது என்பதை நாம் விளக்கிக் காட்டத் தேவையில்லை — புள்ளி விவரம் பேசுகிறது!

தென்னகத்திற்கெனத் தீட்டப் பட்டிருந்த ரூ 560-கோடி திட்டத் தில், மத்திய அரசின் பங்கு ரூ 330 கோடி, மாநில அரசுகளின் பங்கு ரூ 230-கோடி!

மாநில அரசுகளின் பங்கில் செலவிடப்பட்டிருக்கவேண்டிய தொகை (3 ஆண்டுகளில்) ரூ 138 கோடி — செலவிடப்பட்டிருக்கிற தொகை ரூ 116 கோடி — எனவே துண்டு விழுகிற தொகை ரூ 22 கோடி!

மத்திய அரசின் பங்கில் செலவிடப்பட்டிருக்கவேண்டிய தொகை (3 ஆண்டுகளில்) ரூ 198 கோடி — செலவிடப்பட்டிருக்கிற தொகை ரூ 150 கோடி — துண்டு விழுகிற தொகை ரூ 48 கோடி!

**மாநிலங்களின் பங்கில் துண்டு விழுகிற தொகை ரூ 22-கோடி — மத்திய அரசின் பங்கில் துண்டு விழுகிற தொகை ரூ 48-கோடி!**

எனவே தென்னகத்தின் திட்டங்கள் சரிவர நிறைவேற்றப் படாததற்கு முக்கிய காரணம் மத்திய அரசாங்கம்!

தென்னகம் வஞ்சிக்கப்படுகிறது என்று நாம் சொல்லுவதற்கு இதைவிட வேறென்ன ஆதாரம் வேண்டும்? கைப்புண்ணுக்குக் கண்ணாடியா தேவை? *

# "எலியும் புலியும்"

—[வித்துவான்—பா. தங்கவேலன்]—

காட்டைவெட்டினுன்; மேட்டைத் திருத்திஞன்; கற்களைக் களைந்தான்; முட்களைஎடுத்தெறிந்தான்; கடும் உழைப்பிற்குப்பிறகு கழனி ஆக்கிஞன் உழவன். கிணறு வெட்டி நீர் இறைத்து நிலத்தை உழுதான். எரு இட்டான். விதைகளை விதைத்தான். பகல் இரவு பாராது நீர்பாய்ச்சிஞன். முளைத்த விதைகள் பயிர்களாகக் கிளைத்தன. களை எடுத்தான். பயிர்கள் வளர்ந்தன; பூத்தன; காய்த்தன. உழவன் நாலாபக்கமும் வேலி அடைத்தான். அவன் அறுவடைக்கு உரிய நாளை ஆவலுடன் நோக்கிக்கொண்டு இருந்தான்.

கழனி வரப்புக்களில் எலிகள் பல வளைகளை அமைத்து வாழ்ந்தன. அவைகள் கதிர்களைக் கண்டுவிட்டன. உழவன் இல்லாத நேரமாக எலிகள் எல்லாம் புறப்பட்டன. வயிறுபுடைக்கத்தின்றன. அதுமட்டுமா? வேண்டிய அளவு கதிர்களைக் கள்ள எலிகள் கொள்ளை இட்டன. இவ்வாறு பல நாள் — பல முறை கோழை எலிகள் ஏழையின் நெற்கதிர்களை எடுத்துப் போயின.

வயல் புறத்தை அடுத்து காடு. அக்காட்டில் ஆண் புலி ஒன்று வாழ்ந்தது. அது வேட்டை ஆடிய போதிலும் வேண்டிய உணவைப் பெறவில்லை. பல நாள் உணவின்றிப் பசியால் வாடியது. ஓர் நாள் வேட்டையில் காட்டுப் பன்றியைக் கண்டது. ஓடியது— உறுமியது — ஓங்கி அறைந்தது அதன் கன்னத்தை. காட்டுப் பன்றியும் வீழ்ந்தது கட்டாந் தரையில். ஏனோ புலி அதைக் கண்டு அகமகிழவில்லை—தின்னவுமில்லை. " இப்பன்றி அடிபட்டு வலப்பக்கமாக வீழாமல் இடப்பக்கமாக வீழ்ந்தது. இதைப் புசித்துப் பசி போக்கிக்கொள்வது அடாத செயல்— இழிசெயல்" என்று வீரப்புலி எண்ணி வறிதே மீண்டது.

பகலவன் உதித்துவிட்டான். புலியின் இதயமும் பூரித்தது. இன்றேனும் உணவு கிட்டாதா என்று. புலியின் எண்ணமும் பொய்த்துப் போகவில்லை. அன்றைய வேட்டையில் போர்முகத்திலும் புறங்கொடாத ஆண் யானையைக் கண்டது. பெரும் போரிட்டது. வலம்பட வீழ்த்தியது. உளம் மகிழ உண்டு போனது.

வயலிலே—வயலை அடுத்தகாட்டிலே இக்காட்சிகளைக் கண்டோம். இனி நாட்டுக்குப் போவோம்—புறப்படுங்கள்.

கொட்டும் பனி என்றும், வாட்டும் வெயில் என்றும் பாராமல் உழவன் உழைக்கின்ருன். அவன் உண்ண உணவு உண்டா? காலை முதல் மாலைவரை, மனைவி மக்களுடன் தறிக்குழியில் காலம் தள்ளுகின்ருன் நெசவாளி. உலகோர் மானம் காக்க உடைதருபவனுக்கு ஆடை உண்டா? எழில் மிக்க மாடத்தை எழுப்பித் தருகின்ருன் தொழிலாளி. அவனுக்கு அங்கே இடமுண்டா? மூச்சை அடக்கி ஆழ்கடலுக்குள்ளே மூழ்கி முத்தெடுக்கின்ருன் முனியாண்டி. அவனே முத்தை அணிய முடிவதில்லை. சாண்வயிறு நிரப்பச்சாகத்துணிந்தும் தங்கம் தோண்டுகின்ருன் அச்சரங்கத் தொழிலாளி. அவன் அங்கம் கண்டதா தங்கத்தை? இவர்போல்வார் இடைவிடாமல் உழைத்தும் ஓட்டாண்டி ஆனதேன்? ஆவதேன்?

வயலிலே எலிகள். நாட்டிலும் எலிநிகர் மாந்தர்கள் இருப்பது தான். மனித எலிகளும் உழைக்காமல் பிறர் உழைப்பின் பயனைச் சுரண்டி வாழ்வதுதான்.


பெரியோர் சிலர் பொருள் சேர்க்க அரும்பாடு படுகிருர்கள். ஆனுல்... துன்பத்தைப் பரிசாகப் பெறுகிருர்கள். வறுமை வாட்டுகிறது. கொடுமை கொட்டுகிறது. எனினும் வஞ்சக நெறியில் வருவாய் தேடுவதில்லை. இன்னும் சிலர் உயர்ந்த குறிக்கோளுக்காக —உயர் இலட்சியத்திற்காக உடல் —பொருள் — உயிர் அனைத்தும் தத்தம் செய்கிருர்கள். ஆனுல் எல்லை மீறிய தொல்லை அடைகிருர்கள். எனினும் அறநெறி பிறழ்ந்து இலட்சியத்தை அடைய எண்ணுவதில்லை. சாண் ஏற முழம் சருக்கினும் ஓர்நாள் அந்த உன்னத இலட்சியத்தை அடைகிருர்கள் இவர் போல்வார். இத்தகைய இன்னல் உற்று இலட்சியம் அடைவது ஏன்?

காட்டிலே வீரப்புலி. நாட்டிலும் புலிநிகர் மாந்தர்கள் உலவுவது தான்.

சமுதாயத்தில் — அரசியலில்— பொருளியலில் எலி நிகர் மாந்தர்கள் பலர். புலி நிகர் பெரியோர்கள் சிலர். நீங்கள், எலிகளுடனு? —இல்லை—புலிகளுடனு உறவு கொள்ளப்போகின்றீர்கள்? நான் கேட்கவில்லை. நல்லுருத்திரனுர் எனும் தொல் புலவர் கேட்கின்ருர். கூறுங்கள் பதிலை.

"விளைபதச் சீறிடம் நோக்கி, விளைகதிர்
வல்சி கொண்டு அளைமல்க வைக்கும்
எலிமுயன் றனையர் ஆகி, உள்ளதம்
வளன் வலி உறுக்கும் உளம் இலாளரொடு
இயைந்த கேண்மை இல்லாகி யரோ?
கடுங் கண் கேழன் இடம்பட வீழ்ந்தென,
அன்று அவண் உண்ணுதாகி, வழிநாள்
இருங்களிற்று ஒருத்தல் நல்வலம்படுக்கும்
புலிப்பசித்தன்ன மெலிவில் உள்ளத்து
உரனுடை யாளர் கேண்மை யொடு
இயைந்த வைகல் உளவாகி யரோ?"

(புறநானூறு—190)




# இலக்கிய உலகில்....

ஒரு சமுதாயத்தின் நாகரிகத்தையும் பண்பாட்டினையும் அளக்கும் கருவிகளில் இலக்கியம் இன்றியமையாதது. தமிழ்இலக்கியத்தைப் பொறுத்த வரையில் இன்று மறுமலர்ச்சி அரும்பியுள்ளது உண்மையே. இம் மறுமலர்ச்சி, சங்ககால இலக்கியங்களை—அதாவது அயலார் கலப்பு அதிகம் நிகழாத காலத்து இலக்கியங்களைக் கண்டறிந்து வாழ்க்கையை மீண்டும் புதுப்பித்துக்கொள்ளும் ஆர்வமாக ஒரு பக்கம் எழுந்துள்ளது. இன்னொரு பக்கம் நமது இலக்கியப் பழைமையையே வேராகக்கொண்டு புதுமை இலக்கியம் காணத்துடிக்கும் ஆர்வமாகவும் எழுந்துளது. இவ்விரண்டிற்கும் இடையில் இடைக்கால இலக்கியங்களையே விடாமல் போற்றிப் புகழும் ஆர்வமும் வாழ்கின்றன.

இலக்கியத் துறையை இம் மூவகை நோக்கத்துடனும் அணுகுவோர் இன்று நாட்டில் பலர் உண்டு.

இலக்கியத்தை அணுகும் முறையிலும், அதனால் நாம் எதிர்பார்க்கும் நோக்கத்திலும் நன்மையே விளைதல் வேண்டும். இதற்கு முதலாவதாக. இலக்கியத் துறையில் நிலவிவரும் தீய பண்புகள் களையப்படுதல் வேண்டும். குறிப்பிட்ட இலக்கியங்களையே கண்மூடிப் போற்றுதலும், கண்மூடித் தூற்றுதலுமாகிய பண்புகள் இலக்கியத் துறையில் வளரும் களைகளே என்பதில் ஐயமில்லை. இத்தீய பண்பு இன்று நேற்று நம்மிடையே வளர்ந்ததல்ல. கலிங்கத்துப் பரணி ஆசிரியர் செயங்கொண்டார் காலத்திலிருந்தே வளர்ந்து வந்திருக்கின்றது.

இராமகாதை, பாரதம் இவற்றைத் தவிர, மற்ற நூல்களைப் போற்றவோ, உயிர் இலக்கியம் என்று நினைக்கவோ செய்யாத பலரை இன்று காண்கின்றோம். செயங்கொண்டார் காலத்திலும் இம்மனப்பான்மை கொண்ட பலர் இருந்திருக்கின்றனர். தீய விளைவுகளை விளைவிக்கும் இம்மனப்பான்மை செயங்கொண்டாரின் சிந்தனையைத் தூண்டியது. இலக்கிய உலகில் இவ்வழிபாட்டுக்

வித்துவான். இரா. சொக்கலிங்கம்

கொள்கையைத் துரத்த வேண்டுமென்ற எண்ணம் கொண்டவராய் இருந்த அவர், தாம் இயற்றிய கலிங்கத்துப் பரணியில் தமது கருத்தை வலியுறுத்த வாய்ப்பேற்படுத்திக்கொண்டார். அவர் காலத்தில், தமிழில் சிறந்த இலக்கியங்கள் எவை? என்றவினாவிற்கு இராமகாதையும் பாரதமும் தான் விடையாக இருந்தன. அவற்றை விடையாகக் கூறுவோர்தான் அக்கால இலக்கிய உலகில் செல்வாக்குப் பெற்றிருந்தனர். தமிழக மண்ணில்-தமிழ்ப் பண்பாட்டில் விளைந்த காப்பியங்களாகச் சிலம்பையோ — மேகலையையோ பெருமையுடனும் உரிமையுடனும் கூறிக்கொள்வோர் மூலையில் ஒதுங்கிவாழ்ந்தனர் போலும்! ஆனால் செயங்கொண்டார் அவ்வாறு தன் இனம் பழிக்கும் இழிநிலையில் அகப்படவில்லை. தமிழரசன் குலோத்துங்கனின் போர்க்களம் பாடவந்தவர், இராமாயண-பாரத அடிமைகளுக்கு முதலில் எதிர்க்குரல் கொடுக்கின்றார்.

“இராமாயண மாபாரத முளவென்று
ஓவாவுரை பொழியும்படி யுளதப்
பொருகளமே.”

[ஓவாவுரை—நீங்காத பேச்சு.
பொருகளம்—போர்க்களம்]

‘போர்முறை இலக்கியம் எமது புறநானூறு’ என்னும் உரிமையுரை செயங்கொண்டார் காலத் தமிழகத்தில் இல்லை. ‘இராமாயணமும் பாரதமும் உள்ளனவே’ என்ற அடிமையுணர்வுக் குரலே செயங்கொண்டாரின் செவியைத் துளைத்தது! அந்த இரண்டு நூல்களின் புகழைப்பற்றிய ஒழியாத பேச்சே (ஓவா உரை) அவர் சிந்தனையைக் கிளறியது! இந்த ஒழியாப் பேச்சு ஒழியாதா? என எண்ணினார். அந்த எண்ணத்திலிருந்த அவருக்குச் சிறந்த போர்க்களம் பாடும் வாய்ப்புக் கிட்டியது. இனி, அயலாரின் போர்க்களத்தைப்போற்றிப் புகழ் பாடும் ஓவாவுரை ஒழியட்டும் என்கிறார்!

பாரத — இராமாயணப் போர்க்களங்களைவிட உரிமையுடன் போற்றிப் பேசுவதற்கு இதோ குலோத்துங்கன் போர்க்களம் உளது என்கிறார்! செயங்கொண்டாரின் இவ்விரண்டு வரிகள், அவர் காலத்து இலக்கிய உலகில் காணப்பட்ட கண்மூடிப் பழக்கத்தையே (குறிப்பிட்ட சில இலக்கியங்களை மட்டும் அளவு கடந்து போற்றுதல்) குறிப்பிடுகிறது என அறிதல்வேண்டும். அறிந்து அத்தீய பண்பு தற்கால இலக்கிய உலகில் நுழையா வண்ணம் தடுத்தல் அறிஞர் கடனும்.

★

கலைகள், விஞ்ஞானப் பிரிவுகள் யாவும் ஒரே மரத்தின் பல்வேறு கிளைகளே. மனித வாழ்க்கை வெறும் உடலளவில்—உலகாயத நிலையில் இருக்கின்றது. இந்த நிலையிலிருந்து மனித வாழ்க்கையைச் சால்புடையதாக உயர்த்தி, கட்டற்ற விடுதலை தரும் அறநெறிக்கு ஈர்த்துச் செல்வதற்காகவே மேற்குறித்த நிலையங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

# பாத யாத்திரை

—[நா. புகழேந்தி]—

வளைந்து நெளிந்து செல்லும் ஆற்றைப்போல் காட்சியளித்துக் கொண்டிருந்த புதூர்ச்சாலை வெறிச்சோடிக்கிடந்தது. இராணி மங்கம்மாள் காலத்தில், வழிப்போக்கர்கள் தங்கி இளைப்பாறுவதற்காக நட்டு வளர்க்கபபட்ட புளிய மரங்கள் சாலையின் இரு பக்கங்களிலும் நின்று தங்கள் முதுமைக்கோலத்தை வெளிக்குக் காட்டிக்கொண்டிருந்தன. கண்ணுக்கெட்டிய தூரம்வரை ஒரே கரிசல் காடுகள் மயம்தான். பயிர் பச்சைகளை மருந்துக்குக்கூட காண முடியவில்லை. சித்திரை மாதம் அடிக்கவேண்டிய வெயில் புரட்டாசி மாதம் அடித்துக் கொண்டிருந்தது. மழைபெய்ய வேண்டிய காலத்தில் அனல் வீசிக்கொண்டிருந்தது.

அந்தச் சாலையில்--அனல்வீசும் நடுப்பகலில் ஒரு பெரியவர் சுமார் அறுபது வயது நிரம்பியவர் — எட்டு வயதுச் சிறுமி ஒருவளைக் கையில்பிடித்துக்கொண்டு நடந்து கொண்டிருந்தார். நீண்ட காலமாகச் செபபனிடப்படாத அந்தச் சாலையில், எழும்பிக் கொண்டிருந்த வெண் புழுதியில் கால் தூக்கி வைத்து நடக்கமுடியாமல் சிறுமி திண்டாடிக்கொண்டிருந்தாள்.

"தாத்தா... என்னால் இனி ஒரு அடிகூட எடுத்துவைத்து நடக்க முடியாது. என்னை இந்தக் காட்டிலேயே விட்டுவிட்டுப் போய் விடுங்கள்; நான் பட்டினி கிடந்து செத்துப்போகிறேன்'' கண்களிலிருந்து கண்ணீர் பொல பொலவென உதிர அழுதுகொண்டே ஒரு மொட்டைப் புளிய மரத்தின் அடியில் நின்றுவிட்டாள் சிறுமி. பெரியவரின் பாடு சங்கடமாகி விட்டது. சிறுமியைப்பெற்றெடுத்துப்போட்டுவிட்டுத் தாய் கண்ணை மூடியபோதுகூட இப்படிக் கலங்கியதில்லை. அதைத் தொடர்ந்து இரண்டாவது ஆண்டில் மனைவி சென்ற இடத்துக்கே சிறுமியின் தந்தையும் சென்றார். இரண்டு உயிர்களும் அனாதையாகச் சிறுமியைப் பெரியவரிடம் விட்டுவிட்டுச் சென்றபோதுகூட இப்படிக் கலங்கியதில்லை. ஆனால்... இப்போது பெரியவரின் கண்களிலிருந்து நீர் ஊற்றுப்போல கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. அதை வெளிக்குக்காட்டிக்கொள்ளாமல் ''கண்ணு ...... அதோ பாரு... அதுதான குளத்தூர். ஊருக்குள் போனதும் உனக்குப் பலகாரம் வாங்கித் தருகிறேன். அழாமல் சீக்கிரமாக நடந்தால் இப்பவே போய்விடலாம்'' என்று சிறுமிக்குத் தைரிய மூட்டிப் பார்த்தார். அதற்கு அவள் அசைவதாக இல்லை!

பலகாரம் தின்றால் வயிறு தானே நிறையும், கால்வலி தீராதே...'' என்றுகூறிக்கொண்டு மீண்டும் கண்களைக் கசக்கினாள். சிறுமிக்கு எவ்வளவு தைரிய மூட்டினாலும் சரி — சமாதானப் படுத்தினாலும் சரி, இனி ஒரு அடிகூட எடுத்துவைத்து நடக்கமுடியாது, நடக்கவும் மாட்டாள். காரணம் சுமார் இருபது மைல்கள் நடந்து அவள் கால்கள் இரண்டும் வீங்கிப்போயிருந்தன.

வேறு வழியில்லாததால் சிறுமியைத் தூக்கித் தோளிலே வைத்துக் கொண்டு பெரியவர் தள்ளாடித் தள்ளாடித் நடக்கலானார். அவர் நடந்துபோய்க்கொண்டிருக்கும் பொழுதே புழுதியை வாரி இறைத்துக்கொண்டு கடபுடாச் சத்தத்தோடு இரண்டு மூன்று பஸ்கள் அவரைத் தாண்டிப் போய்க்கொண்டுதான் இருந்தன. அதில் ஏறிப்போகப் பெரியவர் கையில் பணமில்லை!

பசி காதை அடைத்தது. கண்கள் மங்கின; கால்கள் முன்னை விட இப்போது பல்மாகத் தள்ளாடலாயின. நடக்கவே முடியவில்லை. சிறுமியின் சுமை வேறு அழுத்திற்று! 'அதோ இருக்கிறது 'இதோ, வந்துவிட்டது' என்று மனதைத் தேற்றிக்கொண்டு ஊக்கத்தைச் கைவிடாமல் குளத்தூரை நெருங்கி, ஒரு வேப்பமரத்தடியில்போய் நின்றார். அவர் தோளிலிருந்து இறங்கினாள் சிறுமி. ''தாத்தா தாத்தா...... பலகாரம் வாங்கிக்கொடுப்பதாகச் சொன்னீங்களே... எனக்கு வயிறு பசிக்கிறது, வாங்கிக்கொடுங்கள் தாத்தா'' என்று கெஞ்சினாள் சிறுமி. வேட்டியில் இருந்த முடிச்சைத் தடவிப் பார்த்தார் பெரியவர். அவளுக்கு என்ன பதில் சொல்வது? முடிச்சு அவிழ்ந்திருந்தது. அவர் கையில் காலணக்கூட இல்லை என்பதை அது காட்டிற்று. ஆனால் அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை சிறுமியால்!

அந்தப்பக்கமாக நடமாடிக் கொண்டிருந்த சிலருக்கு எப்படியோ பெரியவரின் நிலை தெரிந்து விட்டது. பெரியவருக்கு விளாத்தி குளத்துக்குப் பக்கமுள்ள ஏதனப்பட்டிக் கிராமம்தான் சொந்தஊர்- பிறந்த ஊர்! அந்தப்பகுதி வானம் பார்த்த பிழைப்புத்தான். மழை பெய்தால்தான் செழிப்பு ஏற்படும். மழையின்றேல் உழவில்லை — உழவின்றேல் விளைவில்லை? — விளைவின்றேல் உணவில்லை-உணவின்றேல்... என்ன ஆவது? இருக்கிற பொருளும் விலை ஏறிக்கொண்டே இருக்கிறது. இந்த நிலையில் அந்தக் கிராமத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் வேறு. ஆக எல்லாம் சேர்ந்து பெரியவரையும் அவர் பிரியமாக வளர்த்து வரும் பேத்தியையும் ஊரைவிட்டுக் கிளம்பும்படி வைத்துவிட்டது. காலையில் புறப்பட்டவர் இங்கேரம் வரை நடந்து வந்திருக்கிறார். களைப்பாகவும் இருக்கிறார் என்பதைப் புரிந்துகொண்ட அவர்கள், தங்களுக்குள் பணம் பிரித்துப் பெரியவருக்கும் சிறுமிக்கும் சாப்பாடு வாங்கிக் கொடுத்தார்கள். அன்று இரவு முழுவதும். அங்கேயே தங்கி, காலையானதும் போகும்படி கூறிக் கையிலேயும் எட்டணா கொடுத்தார்கள். பெரியவருக்கு இது மிகவும் பேருதவியாக இருந்தது.

காலை மலர்ந்தது...கதிரவனும் உயர ஏறிக்கொண்டே இருந்தான். பெரியவரும் சிறுமியும் தங்கள் இறுதி இலட்சியத்தை

(11-ம் பக்கம் பார்க்க)

# தோற்றவர் வென்றார்!

——[அன்பு]——

"கண்ணே! பிரிவு காலம் நீண்டுவிட்டது கண்டு கோபமா? வேண்டாம்; குற்றம் என் மீதல்ல. காலத்தின் மீதுதான் குற்றம். அது ஏன் வேகமாகச் செல்ல வேண்டும்? மெதுவாகச் சென்றிருந்தால்! எப்படியிருந்தபோதிலும் இடமும் தூரமும்தான் நம்மைப் பிரித்ததே தவிர, நம் உள்ளத்தை எதனாலும் பிரிக்க முடியவில்லை. நான் உன்னை விட்டுப்பிரியும் போதும், உடல்தான் என்னுடன் வந்ததே தவிர, உயிர் உன்னிடம் தானே இருந்தது. பிரிவுக் காலத்திலும் கண்ணிமைக்கும் நேரமளவுகூட நான் உன்னை நினையாமல் இருந்தது கிடையாதே."

"போதும், போதும் யாராவது அறிவற்றவளிடம்போய்க் கூறுங்கள் இக்கதையை! உயிரைத்தான் என்னிடம் விட்டுச் சென்றதாகக் கூறினீர்களே; பின், பிரிந்திருக்கும்போது எப்படி உயிர் வாழ்ந்தீர்கள்?

உன்னை விட்டுச் சென்றதும் முடங்கல் எழுதலாமென்றுதானிருந்தேன். ஆனால் உடன் நிகழ்ந்த சில எதிர்பாராததும் முக்கியமானதுமான அலுவல்களால் முடியாமல் போய்விட்டது!!

"அப்படியென்றால், அருந்தும் உணவில் உன் முகம், பருகும் நீரில் உன் வதனம், என் முகம் பார்க்கும் ஆடியில் உன் எழிற் பிம்பம் என்றெல்லாம் எழுதியிருந்தது பொய்தானா?"

"முன்பு நான் உன்னைப் பார்க்கும்போது இலக்கியப் பாவை போல் இருந்தாயே! பிரிவாற்றாமை உன்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்துவிட்டதே! என் கண்களால் இதை நம்பவே முடியவில்லையே!

"ஆ! என்னை நம்பமுடியாதவள் என்றா கூறினீர்கள்? அப்போது நம்பக்கூடியவள் உங்களுக்கு வேறொருவள் உள்ளாள்போலிருக்கிறது!"

"இளைத்திருக்கும் உன் உடலை என் கண்கள் நம்ப மறுக்கிறது என்றுதானே கூறினேன்! இதைத் தவறாகப் புரிந்துகொண்டு இப்படிச் சிந்தாத கண்ணீரை ஏன் சிந்துகின்றாய்?...நீ இப்படி அழுவதிலும் எனக்குத் தனி இன்பம் கிடைக்கிறது; அதிலும் ஓர் அழகைக் காண்கிறேன். உனது நீல விழிகளிலிருந்து கண்ணீர்த் திவலைகளைக் காணும்போதெல்லாம் அது எனக்கு நீர் நிறைந்த நீலக்கடலைத்தான் நினைவுபடுத்துகிறது!"

"பார்த்தீர்களா? நான் மனம் நொந்து அழுகிறேன்; அதை நீங்கள் உணராமல் கற்பனை பேசுகிறீர்கள்! என் மனக்கொதிப்பு உங்களுக்கு அழகாகப்படுகிறது! இவ்வளவு சுயநலமா? 'உன் கண்ணீர் என் கண்ணீர், உன் துன்பம் என் துன்பம்' என்று பேசியதெல்லாம் வெறும் பேச்சுத்தானா?"

"கண்ணே! உன்னை விட்டுப் பிரிந்து ஒருகண நேரம்கூட அப்பால் செல்லாதே. நீ பிரிந்து செல்லும்போதே என் உயிரும் உடலினின்றும் பிரிந்து சென்றுகொண்டிருக்கும்!"

"ஓகோ! உங்கள் உயிரை நீங்கள் இழக்க விரும்பவில்லை என்பதற்காகத்தான் என்னை உங்களுடனேயே இருக்கச் சொல்கிறீர்களோ? இதிலும் தன்னலந்தான்"

"மனிதனுக்குத் தனிமைதான் சிந்தனையை வளர்க்கிறது என்கிறார்கள். அதுதான் எத்துணை உண்மை! இயற்கையின் மோன நிலையில்தான் எவ்வளவு அழகு காணப்படுகிறது. மனித நடமாட்டத்திற்கப்பாற்பட்ட இத்தனிமையிலன்றோ உள்ளம் புத்துணர்வு பெறுகிறது! இத்தனிமையை நான் மிகவும் விரும்புகிறேன்."

அப்படியென்றால் என்னை இங்கிருந்து போகச் சொல்கிறீர்களா? சற்றுமுன்தானே கூறினீர்கள், 'உன்னைப் பிரிந்திருக்கும்போதெல்லாம் உயிரைப் பிரிந்திருப்பதைப் போன்று இருக்கிறதென்று?

"வாதத்திலும் உனக்கு நிகர் நீயேதான். நான் எவ்வளவுதான் உனக்குச் சாதகமாகப் பேசினும், அதை வேறு பொருளில் எடுத்துக் கொண்டு கேள்விக்கணைகளால் என்னைத் தோற்கடித்துவிடுகிறாயே?"

"ஆ! என்னை வாயாடி என்று சொல்லாமல் சொல்லுகிறீர்களா? வீண் வம்பு பேசுபவள் என்று கருதுகிறீர்களா?"

"அன்பே! உன் பேரழகு என்னை......"

"எப்படி நான் பேரழகுடையவள் என்று கண்டுபிடித்தீர்கள்! மற்றப் பெண்களையும் பார்த்த தால்தானே அவர்களுள் நான் பேரழகு என்று கண்டுபிடிக்க முடிந்தது? மற்றவர்களை எதற்காக நோக்கினீர்கள்?"

"கண்ணே! கலை தெரிந்த சிற்பி வடித்த சிலைபோன்ற உன் உருவம்..."

"உணர்ச்சியற்ற கல் என்று என்னைச் சொல்லுகிறீர்கள்?"

"உன் அழகு முகம் நாணம் கொள்வதில் காணப்படும் ஓர் தனியழகு..."

"நான் வெட்கப்படுவது உங்களுக்குப் பார்க்க இன்பமாக இருக்கிறது போலும்?"

"மாதே! உன் கயல் விழியில் சுரக்கும் பார்வை எனக்கு ஒருவித மயக்கத்தை உண்டு பண்ணுகிறது!"

"அப்படியாயின் என்கண்களில் மயக்கம்கொடுக்கும் மது இருக்கிறதென்று கூறுகிறீர்கள்?"

"மங்கையே! உன் வதனம் ஓர் முழு நிலா!"

"இன்னும் பதினைந்துநாட்களில் என் முகம் இருண்டுவிடும் என்று சொல்கிறீர்களா?"

"பாவையே! மாந்தளிரையொத்தது உன் மென்மையான உடல்!"

"எதையும் தாங்கும் வலிவற்றது என்கிறீர்களா?"

"தையலே! செந்தாமரையிதழ் போன்றது உன் வாயுதடுகள்!"

"பகலவன் மறைவுடன் தானும் மறையும் செந்தாமரைக்கா ஒப்பிட்டீர்கள்?"

"பெண்ணே! மலர்களைப்போன்ற அவயவங்களை உடைய அசைந்தாடும் கொடிபோன்ற உன் உடல்..."

"கொழுக்கொம்பைப் பற்றமுடியாத கொடியின் நிலையாகிவிடுவேன் என்று நினைக்கிறீர்களா?"

* * *

விளைத் தாங்கத் தயாராயில்லை. அதை அவளுக்கு அளிக்க எண்ணினான்; அவள் கரம் பற்றி நெருங்கினான். இதுகாறும் அவளிடமிருந்த வெற்றிப் பெருமிதம் எங்கோ ஓடி ஒளிந்தது. அவள் உடலும் உள்ளமும் ஒருசேரத் துவண்டு நெகிழ்ந்தது.

இப்போது ஆண்மை வெற்றிப் புன்னகை புரிந்தது. பெண்மையும் அவ்வெற்றியைக் கண்டு தோல்வியை ஒப்புக்கொண்டு இன்பம் பெற்றது; இன்பம் அளித்தது. இத்தடவை பெண்மையின் தோல்வியிலும் ஏதோ ஒரு உட்பொருள் இருக்கத்தானே செய்கிறது?

ஊடலிற் றோற்றவர் வென்றா
ரதுமன்னும்
கூடலிற் காணப் படும்.

தோல்வி! தோல்வி!! ஆம்! அவன் தோல்வியை அடையுமுன், தோல்வி அவனை நோக்கி வந்த வண்ணமிருந்தது! அவள் ஊடினாள். அவ்வூடலில் அவளுக்கு வெற்றிமேல் வெற்றி கிட்டியது. அவள் முகத்தில் குறும்பின் சாயல்கொண்ட வெற்றிப் பெருமிதம் குடிகொண்டது. ஆயின் அவன் தோல்வியடைந்தவனாகக் காணப்படவில்லை! அவள் வீசும் சொல்லம்புகளை அவன் மகிழ்வு பொங்க ஏற்றுக்கொள்கிறான். ஒருவேளை அவைகளெல்லாம் ஊடல் என்னும் வில்லினின்றும் எழும் அன்பு என்னும் கணைகளோ? ஆம், அப்படித்தான் இருக்கவேண்டும். இல்லையாயின் அவ் ஆண்மகன் ஏன் இப்படி வெளிப்படையாகத் தோல்வியை ஒப்புக்கொள்கிறான்! அவள் அவனைக் கேள்விக் கணைகளால் வெல்லும் போதெல்லாம் பார்வையில் ஒருவித பொருள் தொனிக்க அவைகளையெல்லாம் ஏற்றுக்கொள்கிறானே? வெற்றியை வேண்டுமென்றே அவள் பக்கம் விட்டுவிடுகிறானே?

காலம் சிறிது சென்றது. அவள் மென்மேலும் ஊடினாள். அவனும் அவ்வூடலில் தோல்வியை, ஏதோ ஓர் எண்ணத்துடன் ஏற்றுக்கொண்டே வந்தான். உணவுக்கு உப்பு எந்த அளவில் அமைய வேண்டுமோ, அந்த அளவிலன்றோ வாழ்க்கையில் ஊடலும் அமையவேண்டும்! எனவே அவர்களது ஊடலும் அத்துடன் ஒரு முடிவுக்கு வந்தது.

அவள் அவனைப் பார்த்தாள். இதுவரை தான் அடைந்து வந்த தோல்வியை அவளுக்கு அளிக்கப் போகும் நோக்குடன் அவனும் அவளைப் பார்த்தான். அவர்கள் பார்வையின் மொழி அவர்களுக்கே புரிந்தது! அவன் இனியும் தோல்

9-ம் பக்கத் தொடர்ச்சி

எட்டிப் பிடித்துவிட்டார்கள். அதாவது தூத்துக்குடி எல்லையைத் தொட்டுவிட்டார்கள். அப்பாடா...நம்மைப்பிடித்த தொல்லை சிறிது குறைந்துவிட்டது. இனி ஏதாவது ஒரு வேலையைத் தேடிப் போகவேண்டியதுதான்" என்று பெரியவர் மனதைச் சற்றுத் திடப்படுத்திக்கொண்டார்.

காந்திஜீக்கு ஜே! காங்கிரஸ் மகாசபைக்கு ஜே! என்று முழக்கமிட்டபடி சிலர் தெருவிலே சென்றுகொண்டு இருந்தார்கள். அந்த வேடிக்கையைப் பார்க்க வீதிகளில் கூட்டம் கூட்டமாக மக்கள் நின்றுகொண்டிருந்தார்கள். பெரியவரும் சிறுமியும் மக்கள் கூட்டத்துக்கு முன்னால் போய் நின்றுகொண்டு ஊர்வலத்தை ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

பக்கத்தில் நின்ற ஒருவரிடம் ஊர்வலத்தைச் சுட்டிக்காட்டி 'இது என்ன கூட்டம்?' என்று கேட்டார் பெரியவர். அதற்குப் பக்கத்தில் நின்றவர் "இதுதான் காங்கிரஸ் கூட்டம். இந்தப் பகுதியிலுள்ள காங்கிரஸ் தலைவர்களும் எம். எல். ஏ.க்களும் ஊர்வலமாகப் போகிறார்கள்" என்று பதில் சொன்னார்! "சம்பளம் காணாதென்று ஊர்வலம் போகிறார்களா" என்று மீண்டும் பெரியவர் கேட்டார். பக்கத்தில் நின்றவர் பெரியவரை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்தார்; புரிந்துகொண்டார். அசல் பட்டிக்காடு, அதனால்தான் இப்படிக் கேட்கிறார். இருந்தாலும் கேள்வியில் பொருளும் இருக்கிறது என்று தனக்குள் எண்ணிக்கொண்டு "மக்களின் குறைகளை நேரில் கேட்டு அதைப் போக்குவதற்காகப் "பாதயாத்திரை" போகிறார்கள் என்று கூறினார்.

ஐயோ! எங்கள் கிராமத்தில் கூட ஏராளமாகக் குறைகள் இருக்கின்றனவே! நான் கூட அங்கே பிழைக்க வழி இல்லாமல் தானே இங்கே வந்தேன். உங்களுக்குக் கோடி புண்ணியம்; இதை அவர்களிடம் கொஞ்சம் சொல்லமாட்டீர்களா...? என்று கெஞ்சினார் பெரியவர்! அடைபைத்தியம்பிடித்த மனிதா, உங்கள் கிராமத்தில் மட்டும்தானா? எல்லாக் கிராமங்களிலும் குறைகள் மலைபோல் குவிந்து கிடக்கின்றன. போட்ட கடுதாசிகளுக்குக் கூடப் பதில் இல்லை. என்னைப்பார்! நானும் ஒரு மில் தொழிலாளி, ஆள்குறைப்புச் சட்டத்தை அமுல் நடத்தி என்னை வேலையிலிருந்து தள்ளிவிட்டார்கள். என்னை மட்டுமா...என்னைப்போல நூற்றுக்கணக்கான தொழிலாளர்களை வீதியிலேவிரட்டிவிட்டார்கள் ......இதை எல்லாம் யார் கவனிக்கிறார்கள்? என்று வேதனையோடு பேசினார் பக்கத்தில் நின்றவர்!

அப்படியானால் இவர்கள் எதற்காகப் பாதயாத்திரை செய்கிறார்கள் என்று மீண்டும் கேட்டார் பெரியவர். இதுவரை கார்களிலே சென்று சென்று அலுப்புத் தட்டிவிட்டது. சிறிது தூரம் காலாற நடந்து பார்க்கலாம் என்று பாதயாத்திரை செய்கிறார்கள் என்று பதில் சொன்னார் பக்கத்தில் நின்றவர்!

# நம்பிக்கை உண்டு; நலிவு இல்லை

[இரா. தென்னவமணி]

தனிப்பட்டோர் வாழ்க்கையானாலும், மக்களின் ஆதரவு பெற்ற ஒரு இயக்கத்தின் முன்னேற்றமானாலும் நம்பிக்கையிருந்தால்தான் பொலிவும், வலிவும் ஏற்படும். நம்பிக்கை இழந்தால் நலிவும் மெலிவும்தான் ஏற்படும். இறந்த காலந்தொட்டே புகட்டி வரும் பாடங்கள் இவை.

தலைவன்மேல் தலைவி நம்பிக்கை இழக்க நேரிட்டால், தலைவி மீது தலைவனுக்கு நம்பிக்கை குறைந்தால் இல்லறம் இருபிரிவாகும்; இன்னல் அடையநேரும்; இருள் சூழும் என்பதனை அன்றாட வாழ்க்கையில் காண முடிகிறது. இயக்கத்தின் கொள்கையின்பால் நம்பிக்கை குறைந்தால் அடிப்படை மாற்றங்கள் ஏற்படும்; அழிவுசக்தி நாடிவரும்; பிளவுகள் காணப்படும். இவற்றைச் சென்ற காலக் கட்சிகளின் வரலாறுகளும் இன்றைய இயக்கங்களின் நடவடிக்கை சம்பந்தமான நாட்குறிப்புகளும் நன்கு உணர்த்தும்.

நம்பிக்கையானது விடா முயற்சியையும், திறமையையும், வெற்றியையும் அடைய ஏணிபோன்றது என்பதை நாம் உணர்ந்தகாரணத்தால்தான், நம் தூய இலட்சியங்களை மக்கள் ஏற்பார்கள் என்ற நம்பிக்கையிலே பணியாற்றிவருகிறோம். இருபத்தைந்து ஆண்டுகளாக கட்டிக்காக்கப்பட்ட கொள்கைகளை, குறிப்பாக ஒன்பது ஆண்டுக் காலமாய்ப் பட்டிதொட்டிகளிலும், மூலை முடுக்குகளிலும், மக்களைச் சந்திக்கும் எந்த இடத்திலும் விளக்கி, ஆதாரங்களைக் காட்டி ஆவன செய்து வருகிறோம்.

உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பேதங்களை வளர்க்கும் இழிவானநோக்கங்களை, முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைபோடும் மூடப் பழக்க வழக்கங்களை, சாதியைக் காப்பாற்றும் சம்பிரதாயங்களை விட்டகற்றவேண்டும்; அறுத்தெறியவேண்டும்; நாட்டை மீட்க, இனத்தைக்காக்க ஒன்று திரளுங்கள்! என்பனபோன்ற இலட்சியங்களை ஏற்றவர்கள், ஏற்று நடப்பவர்கள்; நாடி வருபவர்கள் எவரானாலும் வரவேற்கின்றோம்.

இத்தகைய சமுதாய வளர்ச்சித் திட்டங்களுக்குத் தடையாக உள்ள தீயநோக்கங்கள் ஒரு சாராரிடம் மட்டும் இருப்பதாகக் கூற முடியாது. வடக்கிலிருந்து வந்தவர்களால் வகுக்கப்பட்ட அத்தனை சாதிகளிடமும் பழைமை விரும்பிகளிடமும் குடிகொண்டிருக்கின்றன என்றால், அது மிகைபடக் கூறியதாகாது. இதற்காக மூன்று சதவீதம் உள்ளவர்களை ஒதுக்குதல், ஒட்டுதல் நீதியென்று கூறமாட்டோம். அது அரசியல் நாகரிகமல்ல என்பதால்தான், இத்துணைக் கண்டத்தின் முதல்வர் "பிடிக்காவிட்டால் நாட்டைவிட்டு வெளியேறுங்கள்" என்று கூறியதைத் தவறு என்று எடுத்துக் காட்டிக் கண்டனக்குரல் எழுப்பி, கருங்கொடி காட்டி, இருவரைப்பலி கொடுத்ததோடு, ஏனையோர் துன்பப்படவும் நேர்ந்தது என்பதை நாடறியும்.

"மாமியார் உடைத்தால் மண் சட்டி, மருமகள் உடைத்தால் பொன் சட்டி" என்ற பழைய மொழிக்குப்பாத்திரமானவர்களும் நாம்சிந்தும் செந்நீரைப் பன்னீராக மதிக்கும் மனம்படைத்தவர்களும், நாம் ஒரு சாராரை வெறுத்தது போலவும், இன்று ஆதரவுகொடுப்பதுபோலவும் குற்றம் சுமத்தி வருகிறார்கள். நாம் யாரையும் வெறுப்பதோ விரும்புவதோ கிடையாது என்பதோடு, கொள்கை விரோதிகளுடன் கூடிக் குலாவும் பழக்கம் நமக்கில்லை என்பதையும் பொதுமக்கள் நன்கு உணர்வர்.

அன்று, நம் இயக்கம் உழைப்பினாலும் வியர்வையினாலும் உருவாக்கப்படல்வேண்டும் என்று சொன்னதை இன்று நினைவுபடுத்துகிறோம். காட்டையும் மேட்டையும், மடுவையும் மலையையும், புனலையும் அனலையும் கடந்து வந்திருப்பதை எண்ணி மகிழ்கிறோம். அதே நேரத்தில் கடக்க இருக்கும் பாதையை எண்ணிக் கடமையையும், பொறுப்பையும் உணர்கிறோம்.

உண்மைக்குத் திரைபோடும் திறமைகொண்டவர்களும், அண்டிப் பிழைக்க ஆசைகொண்டவர்களும், வடக்கிற்கு வக்காலத்து வாங்குபவர்களும், கேரளம், கன்னடம் ஆந்திரத்தோடு தமிழகத்திலும் இருக்கிறார்கள் என்பதை மறுக்கமுடியாது. சேய்கள் தாயின் பேச்சைக் கேட்கவில்லை என்பதற்காகத்தாய் பிள்ளைகளை மறந்துவிடமாட்டாள்; பிரித்திடவும் மாட்டாள். அப்படிச் செய்வது தாய்மையுமல்ல. காகிதப் பூவின் தன்மையை உணர்ந்தவன் மணம் கமழும் மல்லிகையை நாடுவதைப் போல, அறியாமைப் படுகுழியில் வீழ்ந்தவன் கரையேறி அறிவாற்றல் பெற ஆசைகொள்வதைப் போல, தாய்மையின் பண்பை உணர்ந்து தாயை நாடுவான். மாற்றார்களின் மதிமயக்கும் செயல்களைப் புரிந்தவர்கள், நம் பணியை அறிந்தவர்கள் நம்மைப்பின்பற்றுவார்கள் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு. எனவே கொள்கைகளை எடுத்துரைக்கும் வாய்ப்புகள் எங்கெங்கு கிடைக்கின்றனவோ அங்கெல்லாம் தொடர்பு கொள்கிறோம்.

நோய் வாய்ப்பட்டவன் மாங்கனியொன்று தின்றால் உடற்குறை ஏற்படும். நல்லுடல் கொண்டவன் அக்கனியை அருந்தினால் இனிமையை காண்பானே தவிர, இன்னல் அடையமாட்டான். எனவே உண்ணும் உணவு உடலைச்சார்ந்ததாகுமே அல்லாமல் மாங்கனி தீதெனக் கூறமுடியாது. இதைப் போன்றதுதான் தேர்தல். நாம் தொடர்புகொண்ட வகையில் தேர்தல் கொள்கைகளை விளக்க ஒரு வாய்ப்பு; வெற்றியெனும் இல்லத்தை நாட ஒருபடி; நம்முடையநோக்கங்கள் எந்த அளவு பலன் பெற்றிருக்கின்றது என்பதை அறிய ஒரு அளவுகோல்.

'நஞ்சுண்ட தேனீக்கள் இருக்கின்றன என்பதற்காகத் தேனை எடுக்காமல் விடுவதில்லை' பணம்

பட்டம், பதவி தேர்தலில் விளையாட்டுப்பொம்மைகளாகவிளையாடுகின்றன என்ற காரணத்தால் ஈடுபாடு கொள்ளாதிருத்தல் ஏற்புடையதல்ல. நாம பணத்தையும் பதவியையும் அடையத்தேர்தலில் ஈடுபடுகிறோம் என்று நேர்மையானவர்கள் கூறமாட்டார்கள். எதிர்த்துப் பணமோ, பதவியோ பெறுவது கடினம். இணைந்து அடைவது எளிது என்பதை நன்கு அறிந்தவர் உணர்வர்.

நாம் கூறிவரும் கொள்கைகளையும், கொண்ட செயல் முறைகளையும் தூற்றியவர்கள், அறிந்தும் அறியாமலும் இருந்தவர்கள் இப்போது நம் கொள்கைகளை ஏற்றிடும் நிலையைக் காண்கிறோம். "நாம் அடிமைகளாக நடத்தப்படுகிறோம் என்று கூறுவதும், இந்தியாவிலிருந்து பிரிந்துவாழ ஆசைப்படுவதும் இகழக்கூடியதாகும்" என்று கூறிடும் தமிழரசுக் கழகத் தலைவர் கூடப் பாரதி விழாவிலே பங்கு கொண்டபோது "சீனாவிற்கு இருபத்தைந்து கலைஞர்கள் போயினர். ஆனால் தமிழ் நாட்டிலிருந்து ஒருவர்கூட அனுப்பப்படவில்லை. இந்தியாசுதந்திரம் அடைவதற்கு முன்பு இந்திய கலைஞர்களை சோவியத் சர்க்கார் கூப்பிடவில்லை. காரணம் இந்தியா அடிமைநாடு. இன்று கூப்பிடுகிறது; காரணம் சுதந்திரநாடு!" என்று கூறுகிறார். தமிழ்நாட்டுக் கலைஞர் செல்லவில்லை எனபதன் வாயிலாக தமிழ்நாடு வடவரிடம் அடிமைப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லாமல் தெளிவுபடுத்துகிறார். "சிவாஜி பாரதி ஆவது இருக்கட்டும்; பின்னால் பார்த்துக்கொள்ளலாம், முதலில் "சென்னை" தமிழ்நாடு ஆகட்டும்" என்று எடுத்துக்காட்டி இடித்துரைக்கிறார். இதனைப்போல ஆங்காங்கு உள்ளவர்களும் அறிந்திடும் நாள் அருகில் வந்துவிட்டது.

எனவே நாம் ஆற்றிவரும் பணிகளை, நமது தூய இலட்சியங்களை மக்களின் முன்னே வைக்கிறோம்; சிந்தித்துச் சீர்தூக்கி ஆதரவு தருவார்கள் என்று நம்புகிறோம். திராவிட இனம் இன்று இல்லாவிட்டாலும் நாளை திருந்தும், தெளியும் என்ற நம்பிக்கை உண்டு; நலிவு இல்லை! இது திண்ணம்! உறுதி!

★

# தெவிட்டாத தேன்

—[ஆர். அண்ணாமலை]—

ஒரு நூலின் பெருமை கால வெள்ளத்தில் மூழ்காமலிருப்பதனால் காணப்படும் என்பது அறிஞர்கள் கூறும் உண்மையாகும். காலம் எனும் பெருங்காற்றில் அகப்பட்டு, அதனை எதிர்த்து நிற்கத் திறமையற்று, ஆழ்ந்து அழிந்து போகின்ற நூல்கள் பல.

ஆனால் உயரிய உண்மைகள் அமைந்த நூல்கள் காலம் செல்லச் செல்ல வளர் பிறைபோல் வளர்ந்தோங்கி எங்கும் ஒளி பரப்பிச் சமுகம உள்ளளவும் தன் ஒளி மங்காமல் வாழையடி வாழையெனத் தனது வன்மையையும் வளத்தையும அளித்து மேம்படுகிறது.

திருவள்ளுவர் செய்த "தமிழ் மறை" இத்தகைய நூலாகும். முக்காலத்திற்கும் பொதுவாகக்காணப்படும் நூல்களுள் நல்ல கருத்துக்கள் திகழ்கின்ற காரணத்தால், திருக்குறளைப் போற்றுகின்றனர். ஒவ்வொரு காலத்திலும் எழுதப்படுகின்ற நூல்கள் பல. அக்காலத்தில் வாழும் மக்கள், நடை, உடை, பழக்க வழக்கங்கள் முதலியவற்றை ஒட்டியே எழுதப்படுவதனால், அவை பிற்காலத்தில் பயன் குன்றியே பாழ்பட்டுப் படிப்பார் இன்றிக், கேட்பார் இன்றிக் கீழ் நிலை அடைந்து விடுகின்றன.

உலக மக்களைப் பொது நோக்குடன் உணர்ந்து அவர்கள் உயர் நெறியறிந்து உய்வதற்குரிய உண்மைப் பொருளாகிய அறம், பொருள், இன்பம்ஆகிய மூன்றின் வன்மை தெரிந்து வள்ளுவர் செய்த நூலைத் தமிழ் மக்களாகிய நாம் நன்கு உணர்து கற்றோமானால் எக்காலத்திலும் அழியாப் பயன் அடைவோம். மக்கள் தம் வாழ் நாளில் திருக்குறளைப் பல முறை படிப்பாராயின் அவர்களுடைய மனம் தெளிவு பெறவும், அறிவு வளர்ச்சி அடையவும் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றையும் தெளிவாகக்காணவும் எளிதாய் இயலும்; எல்லோருக்கும் பயன்படும். மேலும் பொதுவாகவே உலகத்திலே காணும் மனப்பாங்கிற்கு ஏற்றதாவே வள்ளுவர் குறள் அமைந்து இருக்கிறது.

வள்ளுவர் வகுத்த பல வழிகளைக் காணுந்தோறும் நாம் களிப்படைகின்றோம். அவருடைய ஆழ்ந்த அநுபவத்தின் பயனாய் வெளிவந்த ஒவ்வொரு சொல்லும் நம்மை நல்வழிப்படுத்துகின்றது.

வாழ்க்கையில் ஒவ்வொரு நேரத்தில் நடைபெறும் நெருக்கடிகளில் இன்னவாறு செய்க — இன்னது செய்யவேண்டாம். இதனால் இது வரும் என்று ஆராய்ந்து சொல்லும் நல்லுரையைத் திருக்குறள் முழுவதும் காணுகின்றோம்.

இனிய பழங்களில் கூட இனிக்காத தோல் இருக்கும். ஆனால் திருக்குறளில் தெவிட்டாத தேன், நூல் முழுவதும் நிரம்பியிருக்கிறது. ஆற்றல் உடையவர்கள் மட்டும் அல்லாமல் அனைவரும் அந்தத் தேனின் சுவை காண முயல வேண்டும். முயன்றால் பயன் உண்டு.

★

# கப்பல் வந்தது!

உச்சி வேளையில் கொதிக்கும் வெயிலில் தார்ச்சாலையில் மிதியடி இன்றி நடந்து செல்லுகின்றான் ஒருவன். இட்ட அடிபெயர்த்து எடுத்த அடி வைப்பதற்குள் வெயில் கொளுத்திய வெப்பம் தணியுமா என ஏங்குகின்றான். ஆனால் ஒரு அடி பெயர்த்து மறு அடி வைக்கும்போது சூடு உடலை வேகச் செய்கின்றது. மேலே கொளுத்தும் வெயில் மறைக்கக் கையில் குடையும் இல்லை. தவித்துச் செல்லுகின்ற அவன் கண்கள் பூத்துப்போகின்றன, காற்றில் மிதந்த தூசி வந்து விழுகின்றது. அதைத் துடைக்கலாம் எனக் கையை உயர்த்தும்போது கால், யாரோவிட்டெறிந்த வாழைப்பழத் தோலின் மீது நிற்கமுயன்று, முடியாமல் சறுக்கிக் கீழே சாய்கின்றான். எழ முயலும்போது எதிரே ஒரு முரட்டுக் காளை முட்ட வருவேன் என்பதுபோல் கூர்மையான கொம்புகளை முன் நிறுத்திக் காட்டுகின்றது.

இப்படிப்பட்ட இன்னலில் ஒருவன் இருக்க நேர்ந்தால் அவன் நிலை எப்படி இருக்கும்?

அவன் எப்படி இருப்பானோ— ஆனால் இன்றைய தினம் தமிழரின் நிலை இதுவாகத்தான் இருக்கிறது.

*

சில தினங்களுக்கு முன் சென்னைத் துறைமுகத்தில் மலேயாவிலிருந்து ஒரு கப்பல் வந்து நங்கூரம் பாய்ச்சியது. அந்தக் கப்பலிலிருந்து சுமார் ஆயிரம் தமிழர்கள் தங்கள் சொந்த நாட்டு மண்ணை வந்தடைந்தனர். தங்கள் திருநாட்டைவிட்டு சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் மலேயாவுக்குச் சென்ற அவர்கள் மறுபடியும் சொந்த ஊருக்குத் திரும்பி விட்டனர்.

மலேயாவில் சுமார் முப்பது ஆண்டுகள் வாழ்ந்த, உழைத்த அவர்கள் ஊருக்குத் திரும்பியிருக்கின்றனர். மனைவி மக்களுடன் வந்திருக்கின்றனர்.

முப்பது ஆண்டுகளுக்கு முன் அவர்கள் ஏன் அங்கு சென்றனர்? படைவீரர்களாகப் போர்க் கருவிகள் சுமந்து செல்லவில்லை. வயிற்றில் தோன்றித்தோன்றி வாட்டிய பசியைத் தணித்துக்கொள்ள

மா.கி. தசரதன்

'ஏதேனும்' கிடைக்கிறதா என்று தமிழ் நாட்டில் 'சுற்று முற்றும்' பார்த்து ஏதும் கிடைக்கவில்லை என்பதை உணர்ந்த பின்னால் திரைகடல் ஓடித் திரவியம் தேடா விட்டாலும், அரை வயிற்றுப் பசியாவது ஆறும் என்று துணிந்து கப்பல் ஏறினர். கடலுக்கு அப்பால் சென்று கையில் வலிவிருந்தவரை அலுக்காமல் சலிக்காமல் உழைத்தனர். ஒன்றல்ல, இரண்டல்ல — முப்பதாண்டுகளுக்கு மேலாகவே பாடுபட்டனர். மறுபடியும் தங்கள் நாட்டிற்குத் திரும்பிவிட்டனர்.

ஏன்? அளவில்லாத செல்வம் சேர்ந்துவிட்டதனால், 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து என்று மனதைத்திடப்படுத்திக்கொண்டு, இனி இங்கிருக்கத் தேவையில்லை' என்று எண்ணி வந்துவிட்டனரோ? அல்லது இனி உழைக்கமாட்டோம் என்று சோம்பல் கொண்டு வந்துவிட்டனரோ? அல்லது தமிழ்நாடு செல்வத்தில் திளைக்கிறது, இனி அங்கேயே சென்று வாழலாம் என வந்து விட்டனரோ?

இல்லை. தாங்களாக வரவில்லை. வர அவர்களுக்கு விருப்பம் இருந்ததோ இல்லையோ, 'இனி நீங்கள் இங்கு இருக்கத் தேவையில்லை' என்று மலேயா சர்க்கார் அவர்களை வெளியேற்றிவிட்டனர். 'நாங்கள் உழைக்கின்றோம்' என்று இவர்கள் பசித்த வயிற்றைக்காட்டிக் கேட்டிருப்பார்கள். ஆனால் அவர்கள் பசித்த வயிற்றை மட்டும் பார்க்கவில்லை — முப்பது ஆண்டுகளாக உழைத்துத் தளர்ந்து போன உடலை — தேய்ந்துபோன உடலைக் கண்டார்கள். 'போதும் போய்வாருங்கள்' என்று வழியனுப்பிவைத்துவிட்டார்கள். இவர்களும் சென்னைத் துறைமுகத்தை வந்து சேர்ந்துவிட்டனர்.

இடையிலே முப்பது ஆண்டுகள். இரப்பர்த் தோட்டங்களில் உழைத்தனர்— பிழைத்தனர். இன்று தம் நாடு வந்திருக்கும் அவர்கள் நிலைமை என்ன? முப்பதாண்டுகளில் வந்து சேர்ந்த முதுமையும் இயலாமையும் மட்டும்தான் அவர்கள் கொண்டுவந்திருக்கும் 'முதல்', அன்று சென்ற நிலைக்கு அழிவில்லாமல் வந்திருக்கின்றனர்.

அவர்களை 'வரவேற்ற' அதிகாரி ஒருவர் நிலையை விளக்குகின்றார்: அவர்கள் சென்னையில் தங்கும் போது அவர்களுக்கு இலவசமாக உண

அளித்து வருவதாகவும், பிறகு அவரவர் ஊர்போய்ச் சேர இலவசமாக இரயில்வே டிக்கட் தருவது வழக்கம் என்றும் அவர் சொல்லியிருக்கின்றார்.

'சர்க்கார் ஏழைகளுக்கு ஒன்றுமே செய்வதில்லை என்கிறீர்களே, என்ன அக்ரமம்! இதோ பாருங்கள். அகதிகளாக வந்துவிட்டவர்களுக்கு சென்னையில் தங்கும் வரை இலவச உணவும், ஊர் போய்ச்சேர இலவசப் பயணமும் தருகிறார்களே—எதிர்க்கட்சிகளின் கண்களில் இது படுவதில்லையா' என்று கேட்கத்துடிக்கும் நண்பர்கள் இருப்பார்கள். சர்க்கார் மிகவும் தாராள மனது படைத்தவர்கள்தான். இல்லாவிட்டால் இந்தப் பேருதவியைச் செய்ய முன்வருவார்களா? அதுவரை அவர்களைப் பாராட்ட வேண்டியதுதான்.

ஆனால் இதிலே சர்க்காரைப் பாராட்டுவது ஒருபக்கம் இருக்கட்டும், இதன் மூலம் பெறவேண்டிய பாடம் ஒன்று இருக்கின்றது. காணவேண்டிய உண்மை ஒன்று இருக்கின்றது. அதைக் காண வல்லவர்களாகவேண்டும்.

முப்பது ஆண்டுகள் உழைத்து வந்திருக்கின்றார்கள் அவர்கள். ஆனால் அவர்களுக்கு, முப்பது ஆண்டுகள் உழைத்த அவர்களுக்கு இன்னும்,

சொந்தமாகச் சாப்பிட வசதி இல்லை. இரயிலில் போகப் பணம் இல்லை.

ஆனால் இடையில் முப்பது ஆண்டுகள் உழைத்திருக்கின்றனர்.

இங்கிருந்து கப்பல் ஏறுகின்றபோது என்ன நிலைமை இருந்ததோ, அதே நிலைமை இன்றும் இருக்கின்றது. சர்க்கார் சாப்பாடும், இரயில் பயணமும் கிடைக்குமா என எங்கிடும் நிலை இருக்கிறது.

'வெளிநாடு சென்று வந்தால் எவ்வளவு பணம் சேர்த்துவருகின்றனர் தெரியுமா ஒவ்வொருவர். இவர்கள் ஏதோ கண்டதே காட்சி கொண்டதே கோலம் எனச் செலவழித்துவிட்டுவந்திருக்கின்றனர்' என்று சொல்லித் தப்பித்துக் கொள்ளவும் இயலாது. ஏனெனில் இலவசச்சாப்பாடும், இரயில் பயணமும் அளிப்பது வழக்கமாக இருக்கிறதாம்! வழக்கமாக இருக்கிறது என்றால் என்ன பொருள்? வருகின்றவர்கள் அத்தனைபேரும் இப்படித்தான் வருகின்றனர் என்பதுதானே?

அதுதான் போகட்டும், வந்தது தான் வந்தார்களே, வடநாட்டு அகதிகளாகவாவது வந்திருக்கக் கூடாதா? தமிழ் அகதிகளாக அல்லவா வந்து தொலைந்தார்கள். அவர்களுக்கும் 'சென்னையில் தங்கும்போது இலவசச் சாப்பாடு, ஊருக்குப்போக இரயில் டிக்கட்' இரண்டும் தரப்படுகின்றது.

சென்னையில் எத்தனை நாட்களுக்கு அவர்கள் தங்குவார்கள். இரயிலில் இடம் கிடைக்கிறவரை இரண்டொரு நாட்கள் தங்குவார்கள் — இரயிலில் இரவு ஏறினால் மறுநாள்காலை இறங்கிடவேண்டும் —அதற்குள் ஊர் வந்துவிடும்— இந்த உதவியைச் சர்க்கார் தாராளமாகச் செய்கின்றனர். ஆனால் வடநாட்டு அகதிகளுக்குப் 'புனர்வாழ்வு' அளிக்க என்னென்ன திட்டங்கள்—எத்துணை சலுகைகள் — எத்துணை கோடி இதுவரை செலவு — இனி எவ்வளவுக்கு எண்ணம் — எல்லாம் 'வடக்கு' மகிமைதான்!

அகதியானாலும் வடநாட்டு அகதியாகவேண்டும்.

இவர்கள் நிலைமை...

*

மலேயாவிலிருந்து விரட்டப்படுவது போலவே இலங்கையிலிருந்தும் தமிழர் பலரை — பல இலட்சக் கணக்கானவர்களைத் துரத்த அந்த அரசு முயன்றுகொண்டிருக்கின்றது. அவர்களில் எஞ்சி நிற்கும் சிலர் தலைமீதும் கல்லைத் தூக்கிப் போடத் தீர்மானித்திருக்கிறது.

தோட்டத் தொழிலுக்கு இனிமேல் பெரும்பான்மையான இடங்களுக்குச் சிங்களவரையே வேலைக்கு எடுக்கவேண்டும் எனத் தீர்மானித்திருக்கின்றனர்.

குடியுரிமையின்றிக் குடிபெயர்ந்தோர் போக எஞ்சி நிற்போரையும் வயிற்றில் அடித்து வெளியேற்ற இது மறைமுகமான வழியாகும்.

தொழில் கிடைக்கிறதோ இல்லையோ—படிப்பாவது படிக்கலாம் என்று யாரேனும் இலங்கைத் தமிழர் கருதினாலும் இனி அதற்கும் வாய்ப்பில்லை. கொழும்பு நகரத்தில் துவங்கப்பட இருக்கும் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானப் பிரிவில் உள்ள அத்தனை இடங்களையும், இது இயலாவிட்டால் 75-சதவீத இடங்களை, சிங்கள மாணவர்க்கு என்று ஒதுக்கிட வேண்டும் என இலங்கைக் கல்வியமைச்சர் டபிள் யூ. தகநாயகா, 'சிபார்சு' செய்திருக்கிறார்.

அந்தப் பிரிவு இனித்தான் அமைய இருக்கிறது. ஆனால் இதற்குள், அமைய இருக்கும் அந்தப் பிரிவில் தமிழரைச் சேர்க்காமல் துரத்திடத் திட்டம் தயாராகிவிட்டது.

*

இந்த நிலை இப்படியே இருக்கலாமா? கூடாது.

விழுந்தவன் எழுந்து நிற்க வேண்டும்.

எழாவிட்டால் கொதிக்கும் வெயில் தகிக்கும் — முட்டவரும் மாடு மோதிவிடும். எழவேண்டுமானால் உடலில் அதற்காவது ஆற்றல் இருக்கவேண்டும். அந்த ஆற்றல் முயன்றால் பெறக்கூடிய ஆற்றல்தான். மூச்சைப்பிடித்து எழுந்தால் போதும்.

எழுந்தபின் மறுபடியும் விழாமல் இருக்கவேண்டும். அதற்கு முன்னாலே விழுந்ததற்குக் காரணங்கள் என்னென்ன என்பதனைத் தெரிந்துகொள்ளவேண்டும். தெரிந்துகொண்டால் மறுபடியும் அந்தப்பிழைகளைச் செய்யாமல் விழிப்பாக இருக்கலாம்.

வீட்டிலிருந்து புறப்பட்டபோது கையில் குடையிருந்தது—காலில் நடையன் இருந்தது — கண்ணுக்குக் குளிர்ச்சிக் கண்ணாடி இருந்தது. கொஞ்சத்தூரம் வந்ததும் யாரோ ஒருவன் உடன் வந்தான். அவன் மெல்ல மெல்ல நெருங்கியும் வந்தான். 'இது என்ன குடையா' என்றான்! 'ஆமாம்' என்றான். இப்போது 'இது எதற்கு? மழை வந்தால்தானே தேவை! அதுவரை இது சுமைதானே. உங்களுக்கு ஏன் அந்தத் தொல்லை? நான் சுமந்து வருகின்றேன்' என்று வலிய வந்தான். பகலவன் உச்சிக்கு வரும்போது தேவைப்படுமே என்பதை மறந்து குடையை அவன் கையில் கொடுத்தான்.

பின்னும் கொஞ்சத்தூரம் வந்தான்.

நிலையத்தில் ஒருவர் அறுந்தது. அறுந்த வாருடன் எப்படி நடப்பது என்று திகைத்தான்.

வழியில் வந்தவன் 'நான் எடுத்து வருகின்றேன்' என்று சொல்லித் தயங்காமல் அதை எடுத்துக் கையில் சுமந்து வந்தான்.

பின்னும் கொஞ்சத்தூரம் சென்றான்.

'நான் இவ்வளவு உதவி செய்கிறேனே—அந்தக் கண்ணாடியைக் கொஞ்சம் காட்டுங்களேன், பார்க்கலாம்' என்று கெஞ்சினான்.

இளகிய மனது அவனுக்கு. 'சரி' என்று கொடுத்தான். பின்னுங் கொஞ்சத்தூரம் சென்றான்.

வாழைப்பழத்தோல் வழுக்கியது. வீழ்ந்தான், மாடு முட்ட வந்தது.

இப்போதுகூட ஒன்றும் மூழ்கிடவில்லை. துணிந்து எழுந்தால் மாட்டை விரட்டிவிட்டு, ஏய்த்தவனிடமிருந்து தன் உடைமைகளை மீட்டுக்கொள்ளலாம் அவன்.

*

தமிழர்கள் இன்று இருக்கும் நிலையும் இதுதான். இருந்த பொருள்களை, ஏமாளி, குடையும் செருப்பும் இழந்தது போல் எவர்க்கோ எல்லாம் தந்துவிட்டு வறிஞர்களாக இருக்கின்றோம்.

இல்லாமை வெயிலைவிட வெம்மையாக வயிற்றில் வேதனை தருகின்றது.

அணிந்திருந்த கண்ணாடியும் இழந்து, தூசி கண்ணிலே படிந்ததுபோல் நம்முடைய கருத்துக்களிலும் மாசு படிந்திடலாயிற்று. கண்ணில் விழும் தூசியை ஊதி எடுத்துவிடுவது போல் நம்முடைய இலக்கியத்தையும் ஆராய்ந்து ஊதினால் மாசு மறைந்துவிடும்.

ஆனால் அதே நேரத்தில் முட்டவரும் மாடுபோல் தமிழர்க்கு இன்னல் இலங்கையிலிருந்து, மலேயாவிலிருந்து, மற்ற இடங்களிலிருந்து வந்த வண்ணம் இருக்கின்றது.

என்றாலும் துணிவு இருந்தால் போதும், எழுந்திடலாம்—ஏற்றம் பெற்றிடலாம்.

அந்தத் துணிவு வருவதற்கு என்ன வழி—எத்துணையோ வழிகள் இருக்கின்றன. ஆனால் முக்கியமான ஒருவழி இருக்கிறது. அதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

மலேயாவிலிருந்து ஏன் தமிழர்களை விரட்டுகின்றார்கள்.

மலேயாவில் இருப்போர் தமிழர்களை அந்நியர் என்று கருதுவதினால்:

இலங்கையிலிருந்து தமிழர்களைத் துரத்தக் காரணம் என்ன?

இலங்கை சிங்களவருக்குத்தான் சொந்தம் என்று கருதுகின்ற காரணத்தால்.

இந்த இரு காரணங்களும் சரியா தவறா என்பது அல்ல பிரச்சினை. தமிழர்கள் அந்நியர் என்றும், சிங்களவர்க்குச் சொந்தம் என்றும் கருதுகின்றார்கள், அதனால் தமிழர்களை அவர்கள் நாட்டுக்குத் திரும்ப அனுப்பு-கின்றனர்.

மலேயா மக்கள் வாழ, சிங்கள மக்கள் வாழ, அவர்கள், "நம்மவர் அந்நியர், நமக்குச் சொந்தம் பிறர்க்கென்ன இங்கு வேலை'' என்று கருதுகின்றனர்.

தமிழர்—திராவிடர்—வாழ நா தமிழ்நாடு, திராவிடநா தமிழர்க்கு, திராவிடர்க்குச் சொ தம்— இங்கு பிறர்க்கு என்ன வேலை? என்று கருதவேண்டாமா

கருதினால் எழுந்து நிற்போம் எழுந்து நின்றால் எதிர் நிற்கு காளை தாக்கினாலும் தடுத்து கொள்ளலாம்.

இன்றேல்......

இரயிலில் இடங்கிடைக்கின் வரை இலவசச் சாப்பாடும், இட கிடைத்தபின் இலவச டிக்கட் தந்தாலே போதும் என்றுதா ஏங்கவேண்டும்.

*

# என்னே மாற்றம்!

தாராசிங்—கிழப்புலி! சீக்கியர்கள் உள்ளத்திலே, வீரம் எழச் செய்த பெரிய தலைவர். பஞ்சாபில், காங்கிரசுக்கு, இடியெனயிருந்தவர். எவ ரும் அசைக்கமுடியாது எனுமளவுக்குச் செல்வாக்கு பெற்றவர். நீண்ட நாள் தொண்டாற்றியவர். அவர், குருத்வார சிரோமணி தலைவராக நின்றார், அவரை எதிர்ப்பதற்கே, ஒரு சமயம், ஆள் கிடையாது குருத் வாரத்தில். அப்படிப்பட்டவரை எதிர்த்தார் இன்னொருவர்; மூன்று ஓட் வித்தியாசத்தில் தாராசிங்கைத் தோற்கடித்தும்விட்டார்! சீக்கியர் தம் உள்ளத்தில், உணர்ச்சி அலைகள் எழக் காரணமாயிருந்த இவர் இரண்டு ஆண்களுக்குள்ளாக, எந்தக் காங்கிரசைக் குழிதோண்டிப் புதைப்பேன் என்றாரோ, அதே காங்கிரசுடன் கூடிக் குலாவ முற்பட் தையும், தன் கட்சிக்காரர்களையெல்லாம் காங்கிரசில் இணைந்து பணி யாற்றக் கட்டளையிட்டதையும், நாடு அறியும். டில்லிமீது படையெடு பேன்!—என்று கர்ச்சித்த இவர், நேருவைப் போய்ப் பேட்டி காண்பதே பெருமை எனும் அளவுக்கு வந்தார். ஆனால், கடந்த சில மாதங்களாக மீண்டும், பழையபடி இவருக்குக் காங்கிரஸ்மீது எரிச்சல் வரும் அ குறிகள், இவர் பேச்சில் தென்பட்டன. எனினும், குருத்துவார நிர்வா கத் தலைவர் தேர்தலிலேயே, வெற்றிபெறாமற் போய்விட்டார்.

திராவிடநாடு

30—11—58 | வார வெளியீடு | விலை 16 காசு


# அவர் மறந்தார்

**(தமிழ்க்கனல்)**

சொல்லமற வாதவார்த்தை ஒன்று இருக்கும்—ஆனால்
சொல்லிடம றந்தவார்த்தை வேறு இருக்கும்!—தம்மைச்
சொல்லிக்கொண்டு திரியும்பெயர் "காங்கி ரசினர்"—ஆனால்
சொல்லிக்கொள்ள மறந்தபெயர் "தீங்க ரசினர்!"—இன்று
சொல்லிடுவார் "ஆட்சிசன நாயகம்" என்று—ஆனால்
சொல்லமறந் தது"பண நாயகம்" என்று!—அவர்
சொல்லமற வார்"வந்தே மாதரம்" என்று—ஆனால்
சொல்லமறந் தார்" வந்தே மாத்துரோம்" என்று!!

"சுதந்திரம் வந்த"தென்று சொல்ல மறவார்—"வடக்கே
சொந்தமாகி விட்ட"தெனச் சொல்ல மறப்பார்!—இங்கு
"மதம்இல்லை சாதியில்லை" என்ன மறவார்—"ஓட்டுக்
கேட்கையிலே உண்டு"என்று சொல்மறப்பார்!—"வெள்ளையர்
நிதம்நமைச் சுரண்டினார்" என்ன மறவார்—"இன்று
நாங்கள்உமைச் சுரண்டுவோம்" என்ன மறப்பார்!—"நாட்டில்
கதர்வாரம் அனுசரிக்கச் சொல்ல மறவார்—பசியால்
கதறும்வாரம் அனுசரிக்கக் காண மறப்பார்!!

வாழ்வுயரும் ஐந்தாண்டுத் திட்டத்தா லென்பார்—அது
வடக்கினிலே மட்டுமெனச் சொல்ல மறப்பார்!—நாடு
பாழ்படுமே பிரிவினையால்! பாரதம் ஒன்றே—நீங்கள்
பேசும்திரா விடஞ்சிறிதே என்ன மறவார்—ஆனால்
ஆழ்கடல்தா லாட்டும்பெரும் பூமி தனிலே—இவர்
ஆளும்பா ரதம்சிறிதே என்ன மறப்பார்!—நம்
தாழ்ந்தநிலை நம்மவர் மறப்பதற் கில்லை!—வடவத்
திராவிடத்தைப் பிரித்துவிடின் தீர்ந்திடும் தொல்லை!!

நிலையனில் ஒருவர் அறுந்தது. அறுந்த வாருடன் எப்படி நடப்பது என்று திகைத்தான்.

வழியில் வந்தவன் 'நான் எடுத்து வருகின்றேன்' என்று சொல்லித் தயங்காமல் அதை எடுத்துக் கையில் சுமந்து வந்தான்.

பின்னும் கொஞ்சத்தூரம் சென்ருன்.

'நான் இவ்வளவு உதவி செய்கிறேனே—அந்தக் கண்ணாடியைக் கொஞ்சம் காட்டுங்களேன், பார்க்கலாம்' என்று கெஞ்சினான்.

இளகிய மனது அவனுக்கு. 'சரி' என்று கொடுத்தான். பின்னும் கொஞ்சத்தூரம் சென்ருன்.

வாழைப்பழத்தோல் வழுக்கியது. வீழ்ந்தான், மாடு முட்ட வந்தது.

இப்போதுகூட ஒன்றும் மூழ்கிடவில்லை. துணிந்து எழுந்தால் மாட்டை விரட்டிவிட்டு, ஏய்த்தவனிடமிருந்து தன் உடைமைகளை மீட்டுக்கொள்ளலாம் அவன்.

*

தமிழர்கள் இன்று இருக்கும் நிலையும் இதுதான். இருந்த பொருள்களை, ஏமாளி, குடையும் செருப்பும் இழந்ததுபோல் எவர்க்கோ எல்லாம் தந்துவிட்டு வறிஞர்களாக இருக்கின்ருேம்.

இல்லாமை வெயிலைவிட வெம்மையாக வயிற்றில் வேதனை தருகின்றது.

அணிந்திருந்த கண்ணாடியும் இழந்து, தூசி கண்ணிலே படஇடந்தந்ததுபோல் நம்முடைய கருத்துக்களிலும் மாசு படிந்திடலாயிற்று. கண்ணில் விழும் தூசியை ஊதி எடுத்துவிடுவதுபோல் நம்முடைய இலக்கியத்தையும் ஆராய்ந்து ஊதினால் மாசு மறைந்துவிடும்.

ஆனால் அதே நேரத்தில் முட்ட வரும் மாடுபோல் தமிழர்க்கு இன்னல் இலங்கையிலிருந்து, மலேயாவிலிருந்து, மற்ற இடங்களிலிருந்து வந்த வண்ணம் இருக்கின்றது.

என்ருலும் துணிவு இருந்தால் போதும், எழுந்திடலாம்—ஏற்றம் பெற்றிடலாம்.

அந்தத் துணிவு வருவதற்கு என்ன வழி—எத்துணையோ வழிகள் இருக்கின்றன. ஆனால் முக்கியமான ஒருவழி இருக்கிறது. அதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

மலேயாவிலிருந்து ஏன் தமிழர்களை விரட்டுகின்ருர்கள்.

மலேயாவில் இருப்போர் தமிழர்களை அந்நியர் என்று கருதுவதினால்:

இலங்கையிலிருந்து தமிழர்களைத் துரத்தக் காரணம் என்ன?

இலங்கை சிங்களவருக்குத்தான் சொந்தம் என்று கருதுகின்ற காரணத்தால்.

இந்த இரு காரணங்களும் சரியா தவரு என்பது அல்ல பிரச்சினை. தமிழர்கள் அந்நியர் என்றும், சிங்களவர்க்குச் சொந்தம் என்றும் கருதுகின்ருர்கள், அதனால் தமிழர்களை அவர்கள் நாட்டுக்குத் திரும்ப அனுப்புகின்றனர்.

மலேயா மக்கள் வாழ, சிங்கள மக்கள் வாழ, அவர்கள், "நம்மவர்-அந்நியர், நமக்குச் சொந்தம், பிறர்க்கென்ன இங்கு வேலை" என்று கருதுகின்றனர்.

தமிழர்—திராவிடர்—வாழ நாம் தமிழ்நாடு, திராவிடநாடு, தமிழர்க்கு, திராவிடர்க்குச் சொந்தம்— இங்கு பிறர்க்கு என்ன வேலை? என்று கருதவேண்டாமா?

கருதினால் எழுந்து நிற்போம், எழுந்து நின்ருல் எதிர் நிற்கும் காலை தாக்கினாலும் தடுத்துக் கொள்ளலாம்.

இன்றேல்......

இரயிலில் இடங்கிடைக்கின்றவரை இலவசச் சாப்பாடும், இடங்கிடைத்தபின் இலவச டிக்கட்டும் தந்தாலே போதும் என்றுதான் ஏங்கவேண்டும்.

*

# என்னே மாற்றம்!

தாராசிங்—கிழப்புலி! சீக்கியர்கள் உள்ளத்திலே, வீரம் எழச் செய்த பெரிய தலைவர். பஞ்சாபில், காங்கிரசுக்கு, இடியெனயிருந்தவர். எவரும் அசைக்கமுடியாது எனுமளவுக்குச் செல்வாக்கு பெற்றவர். நீண்ட நாள் தொண்டாற்றியவர். அவர், குருத்வார சிரோமணி தலைவராக நின்ருர், அவரை எதிர்ப்பதற்கே, ஒரு சமயம், ஆள் கிடையாது குருத்வாரத்தில். அப்படிப்பட்டவரை எதிர்த்தார் இன்னொருவர்; மூன்று ஓட்டு வித்தியாசத்தில் தாராசிங்கைத் தோற்கடிக்தும்விட்டார்! சீக்கியர் தம் உள்ளத்தில், உணர்ச்சி அலைகள் எழக் காரணமாயிருந்த இவர், இரண்டு ஆண்களுக்குள்ளாக, எந்தக் காங்கிரசைக் குழிதோண்டிப் புதைப்பேன் என்ருரோ, அதே காங்கிரசுடன் கூடிக் குலாவ முற்பட்டதையும், தன் கட்சிக்காரர்களையெல்லாம் காங்கிரசில் இணைந்து பணியாற்றக் கட்டளையிட்டதையும், நாடு அறியும். டில்லிமீது படையெடுப்பேன்!—என்று கர்ச்சித்த இவர், நேருவைப் போய்ப் பேட்டி காண்பதே பெருமை எனும் அளவுக்கு வந்தார். ஆனால், கடந்த சில மாதங்களாக, மீண்டும், பழையபடி இவருக்குக் காங்கிரஸ்மீது எரிச்சல் வரும் அறிகுறிகள், இவர் பேச்சில் தென்பட்டன. எனினும், குருத்துவார நிர்வாகத் தலைவர் தேர்தலிலேயே, வெற்றிபெருமற் போய்விட்டார்.